ஆசிரியர்: மு. கருணாநிதி

முரசொலி

வார இதழ்

முரசு 4 | 6-12-57 வெள்ளி | ஒலி 33

நேரு வருகிறார்!

கற்பனை உரையாடல்

பரலோகப் 'போஸ்ட்டாபீஸ்'

[ஸ்ரீ-ல-ஸ்ரீ ஜகத்குரு சுவாமிகள் தியானத்தில் அமர்ந்திருக்கிறார்கள். அவர் அருகில் புதிய வேலைக்காரன் கோவிந்தன் ரேடியோ கேட்டுக் கொண்டிருக்கிறான். அதைப் பார்த்த ஜகத்குரு கோபமடைகிறார்.]

ஜகத்குரு: டேய்! அங்கே என்னடா செய்து கொண்டிருக்கே? நீ கெட்ட கேட்டுக்கு ரேடியோ வேறே கேட்குதாடா!

கோவிந்: எசமான்! எசமான்! உங்கள் பேச்சை ரேடியோவில் ஒலி பரப்புகிறார்கள் எசமான்! இங்கே வந்து கேளுங்களேன்!

ரேடியோ: "இதர மதங்களில் மனிதனுக்கும் பரம்பொருளுக்கும் நேர் சம்பந்தம் உண்டு. நமது மதத்திலோ தேவதைகளைத் திருப்தி செய்வதன் மூலம்தான் ஆண்டவன் அருளைப் பெற்றாகவேண்டும். யாகங்களும் இதர சடங்குகளும் அதனால்தான் ஏற்பட்டன. ஆண்டவனிடமிருந்து நாம் அடையும் நன்மைகளுக்கு நன்றி தெரிவிக்கும் முறையிலேயே யாகங்களைச் செய்கிறோம். ஒரு ராஜாங்க விருந்தில் வெளிநாட்டில் இருக்கும் தலைவருக்கு அளிக்கும் 'டோஸ்ட்' எப்படி அவருக்குத் திருப்தியை அளிக்குமோ—அதேபோல் அக்னி தேவதைக்கு நாம் அர்ப்பணிக்கும் வஸ்துக்கள் ஈசுவரனுக்குச் சந்தோஷத்தைத் தருகின்றன! சர்க்காரிடமிருந்து நாம் பல நன்மைகளைப் பெறுகிறோம் அதற்கு வரிகள் கொடுப்பது போலத்தான் இதுவும். வரிகளை நாம் நேராகப் பிரதமந்திரியிடம் கொண்டுபோய்க் கொடுக்க முடிவதில்லை. எனவே சர்க்கார் பிரதிநிதிகளான அதிகாரிகளிடம் சேர்த்து விட்டால் அது போய்ச் சேர வேண்டிய இடத்திற்குப் போய்ச்சேர்ந்து விடுகிறதல்லவா?" ...இருபதாவது நூற்றாண்டிலே—அறிவியல், அணு உலகத்திலே-சங்கராச்சாரியார் இங்ஙனம் பேசி, பக்தர்களைப் பரவசப்படுத்தினர்!

கோவிந்: எசமான்! ஒரு சந்தேகம்! உலகத்தின் உயிர்களெல்லாம் தெய்வமென முன்பு கூறியிருக்கிறீர்களே, அப்படியானால் யாகத்தில் பாழ்படுத்தப்படும் ஏராளமான அரிசி, பால், நெய் முதலியவற்றை ஏன் எழைமக்களுக்குத் தானமாகக் கொடுக்கக் கூடாது? ஏழைக்கு உதவி செய்தால் அது ஆண்டவனை மகிழ்ச்சி செய்வதற்கு சமமென நம் மதத்தில் பல கதைகள் நிரூபிக்கிறதே! மேலும் நேற்று ஒரு மீட்டிங்குக்குப் போயிருந்தேனுங்க! அதில் ஒருவர், "அவிசொரிந்தாயிரம் வேட்டலின் ஒன்றன் உயிர் செகுத்துண்ணாமை நன்று"—அதாவது "நெய் முதலான பொருள்களைத் தீயில் சொரிந்து ஆயிரம் யாகங்களைச் செய்தலைவிட ஓர் உயிரைக் கொன்று அதன் ம்மிச உணவை உண்ணாமலிருத்தல் நல்லதென்று, குறளை எடுத்துக் காட்டிக் கூறினார். சைவ உணவின் சிறப்பைக் கூறி, அது இந்து மதத்தின் தனிப் பெரும் கொள்கையென வானளாவப் புகழ்ந்தார். அப்படியானால் யாகம் செய்யும்பொழுது முன்னோர்கள் ஆடு, கோழி முதலானவற்றை—ஏன், மனிதர்களைக் கூட—கொலை செய்தார்களாமே! அதுவும் ஆண்டவனுக்கு வெகுமதி அனுப்புவதில் ஒரு பிரிவுதானே? அதுவும் இந்து மதத்தின் சிறப்புதானே?

ஜகத்: டேய்! இவ்வளவு தூரம் பேசஎங்கடா கத்துக்கிட்டே? அந்த...அந்தக் கூட்டத்திற்கெல்லாம் போக ஆரம்பித்து விட்டாயாடா?

கோவிந்: இல்லீங்க!......அவங்கெல்லாம் எம். ஏ., பி. ஏ., படிச்சவங்க! அவர்களோடு எழுத்து வாசனையே அற்ற நான் ஏன் சேரப்போகிறேன்? ...எனக்குத் தோன்றிய சந்தேகத்தைக் கேட்கிறேனுங்க! இன்றுகூட ஆண்டவன் பெயரால் அநேக உயிர்களைக் கொலை செய்கிறார்களே! பத்ரகாளிக்குப் பிரியாணியும், ஆட்டுக் கறி உணவும் அளிக்கிறார்களே! முன்பு மதுகூட வைப்பார்களே! அந்த இந்து மதந்தானா சைவ உணவின் சிறப்பை உலகுக்கு உணர்த்தியது?

ஜகத்: டேய்! வாயைப் பொத்திக் கொள்ளடா! மேலே ரேடியோவிலே என்ன நடக்குதுண்ணு பார்க்கலாம்!

ரேடியோ: "நாம் பிறப்பதற்குக் காரணம் காமம்; அதாவது ஆசை. நம் இறப்புக்குக் காரணம் காலம்........."என ஜகத்குரு எடுத்துக் கூறினார்கள். மேலும், அதைப்பற்றி அவர்கள் கூறுகிறார்கள், "ஈசுவரனே காமத்தையும் காலத்தையும் வென்றவர். காலனைக் கண்ணால் எரித்தவன். காலனைக் காலால் உதைத்தவன் அல்லவா அவர்?"

கோவிந்: மேலும் ஒரு சந்தேகம் எசமான்! காமத்தை வென்ற கடவுளுக்குக் குழந்தைகள் இத்தனை எப்படிப் பிறந்தன? ...காமத்தை வென்ற கடவுளுக்கு மனைவிகள் இத்தனை பேர் ஏன்? அருள் வடிவமான கடவுள்கள் ஏன் இப்படி சூலாயுதம், வேலாயுதம், சக்ராயுதம் சகிதம் காட்சியளிக்கின்றன? கடவுள் காலனைக் காலால் உதைக்கும் காட்சியைக் காணக் காண என் உள்ளம் நடு நடுங்குகிறதே பிரபோ! குழந்தை உள்ளம் படைத்தவரெனத் தாங்கள் கூறும் கடவுளுக்கு இவ்வளவு கோபம் ஏன் பிரபோ?

ஜகத்: டேய்! நீ என்ன வர வர வாயாடியாகப் போய் விட்டாய்! ஆமா; மணி இவ்வளவு ஆகி விட்டது — இன்னும் மடத்துக் கணக்கப் பிள்ளையைக் காணவில்லையே! என்னடா நான் கொடுத்த கவரை ஒழுங்காகத் தபாலாபிசில் சேர்த்தாயா?

கோவிந்: ஓ! அது சரி எசமான்! கணக்கப் பிள்ளை நிச்சயம் வருவார்! ஆனால் ஒரு சந்தேகம்!

ஜகத்: எப்பொழுதும் உனக்குச் சந்தேகம்தான்!

கோவிந்: நெருப்பிலே போடும் எல்லா பொருளும் சந்திர பகவானுக்கு—சூரிய பகவானுக்குக்கூடப் போய்ச் சேர்ந்து விடுமா?

ஜகத்: ஓ, தாராளமாக!

கோவிந்: அப்படி யென்றால் நெருப்புதான் — அக்னி பகவான்தான் இந்தியாவின் இணையற்ற இந்து மதத்தின் ராக்கெட்டா என்ன?

இந்திய சர்க்கார் இவ்வளவு செலவு செய்து தபால் தந்தி இலாக்கா நடத்துவதில் அர்த்தமே இல்லையே! இருபதாவது நூற்றாண்டின் இணையற்ற அக்னி தபால் தந்தி சர்வீஸ் இருக்கும் பொழுது, தபால் தந்தி இலாக்கா ஏன்? கடவுளுக்கு பார்சல்களை எடுத்துச் செல்லும் அக்னி பகவான் உங்கள் கணக்கப் பிள்ளைக்கு மட்டும் கவரை எடுத்துச் செல்ல மாட்டாரா என்ன?

[அப்பொழுது அங்கே கணக்கப்பிள்ளை வருகிறார்.]

ஜகத்: ஏன் இவ்வளவு நேரம்? அது சரி—நான் அனுப்பிய ஆயிரம் ரூபாய் வந்து சேர்ந்ததா?

கணக்கப் பிள்ளை: ஆயிரம் ரூபாயா? அனுப்பினீர்களா?

ஜகத்: (கோபமாக) டேய் கோவிந்தா.........! அந்தக் கவரை என்னடா செய்தாய்?...

கோவிந்: அதை அன்றே அக்னி பகவான் மூலம் அனுப்பி விட்டேனுங்களே!

[தொடர்ச்சி பக்கம்—8]

நாஞ்சில் மாவட்ட தி.மு.க. மாநாடு

நாகர் கோவிலில் (கிருஷ்ணன் கோவில்) கலைவாணர் பந்தலில்

டிசம்பர் 27-28 (வெள்ளி, சனி) ஆகிய நாட்களில் நடைபெறும்.

தலைவர்: **ஈ. வி. கே. சம்பத்,** எம். பி.

திறப்பாளர்: டாக்டர். **எஸ். அருணாசலம்** எம். பி., பி. எஸ்.

அறிஞர் அண்ணா, நாவலர் நெடுஞ்செழியன்

மற்றும் கழகச் சொற்பொழிவாளர்கள் கலந்து கொள்வார்கள். இரண்டு நாட்களிலும் நாடகங்கள் உண்டு.

—கலைக்குமார், அமைப்பாளர், விளம்பரக்குழு.

கி. மனோகரன், வரவேற்புக் குழுத் தலைவர்



வெள்ளி 6—12—57 சென்னை

செவி சாய்ப்பீர்!

"இந்திய நாட்டில் 5,58,089 கிராமங்களும், **3018** பட்டணங்களும் இருக்கின்றன. நம் நாட்டில் உள்ள மக்களின் மொத்தத் தொகை **3569** லட்சம். அவற்றில் **2950** லட்சம் மக்கள் கிராமங்களில் வசிக்கிறார்கள். ஆகவே; ஜனநாயகம் கிராமங்களில் அமைக்கப்பட்டால் அன்றி, மத்திய அரசாங்கம் ஜனநாயக அமைப்புடையது என்று சொல்வதற்கில்லை."

—என்று முன்னாள் மேயர் திரு. கே. என். சீனிவாசன் அவர்கள் அண்மையில் நடைபெற்ற சென்னை மாநில பஞ்சாயத்து யூனியன் மாநாட்டிலே பேசியிருக்கிறார்.

இந்திய உபகண்டத்தின் முன்னேற்றம் என்பது அதன் கிராமங்களின் முன்னேற்றம் என்பது எல்லோரும் அறிந்த செய்தி.

ஆனால் அந்தக் கிராமங்களின் முன்னேற்றத்திற்கும்; அந்த முன்னேற்றத்திற்கு அடிப்படையான விவசாய முன்னேற்றத்திற்கும் அமைக்கப்பட்ட திட்டங்கள் தோல்விப் பாதையில் சென்று கொண்டிருப்பதைத்தான் அரசாங்கத்தின் போக்கு காட்டிக்கொண்டிருக்கிறது.

முதல் ஐந்தாண்டுத் திட்டம் என்பது விவசாய அபிவிருத்தித் திட்டமே—என்று பலமுறை பண்டித நேரு விளக்கம் காட்டிப் பேசியிருப்பதையும்; பொருளாதார நிபுணர்கள் உணர்த்தியிருப்பதையும் யாரும் மறந்திருக்க முடியாது.

முதல் ஐந்தாண்டுத் திட்டத்தின் காலம் முடிந்து விட்டது. ஆனால் இந்திய உபகண்டத்தின் விவசாய நிலையோ தொட்ட இடத்திலேயே இருக்கிறது.

"உணவு உற்பத்தி அதிகரித்து விட்டது."

"இன்னும் ஓராண்டில் சுய தேவைப் பூர்த்தி என்னும் கட்டத்தை அடைந்து விடுவோம்."

"இனிமேல் வெளிநாட்டிலிருந்து உணவு தான்ய இறக்குமதிக்குத் தேவையே இருக்காது."

—இப்படி யெல்லாம் கற்கண்டும் கனிப்பாகும் தோற்றுமே விதத்திலே வாய்ப் பந்தல் கட்டினார்கள்; அதற்குத் துணையாக புள்ளி விபரங்களை அள்ளி வீசினார்கள்; அரசாங்கத்தின் பிரச்சாரப் பீரங்கிக் குழல்களை முடுக்கி விட்டார்கள்.

ஆனால் முடிவு?

மீன் சாப்பிடுங்கள்—என்று உபதேசிக்கின்ற அளவு; வயிற்றைக் கட்டி உணவை மிச்சம் செய்யுங்கள் — என்று வெட்கத்தை விட்டு அறிவிக்கின்ற அளவு அரசாங்கத்தின் 'விவசாய முன்னேற்றம்' அமைந்திருக்கிறது.

—அந்த அளவுக்கு 'கிராம இந்தியா'வின் முன்னேற்றத்திற்கு அரும்பாடுபட்டு அல்லும் பகலும் அனவரதமும் உழைக்கிறார்கள், ஆளவந்தார்கள்!

அதே மாநாட்டில் கலந்து கொண்ட அமைச்சர் பக்தவத்சலம் குறிப்பிட்டிருக்கிறார்:

"இந்த மாநாட்டில் குழுமியிருக்கும் பஞ்சாயத்துத் தலைவர்களைப் பார்க்கும்போது தமிழ் நாட்டையே என் கண் முன்னால் பார்ப்பதுபோல் இருக்கின்றது. இம்மாதிரியானதோர் மாநாட்டில் சேர்ந்து சிந்திப்பதால் நல்ல பலன் காணமுடியும்!"

—பஞ்சாயத்து 'போர்டுகளின் அமைப்பிலேதான் தமிழ்நாடே இருக்கிறது என்கிறார், அமைச்சர்!'

'ஜனநாயகம் கிராமங்களில் அமைக்கப்பட்டால் அன்றி மத்திய அரசாங்கம் ஜனநாயக அமைப்புடையது 'என்று சொல்வதற்கில்லை' என்று அழுத்தந் திருத்தமாகச் சொல்கிறார், முன்னாள் மேயர்!

—இவற்றை யெல்லாம் கவனிக்கும்போது ஜனநாயகத்துக்குக் கண்ணுறங்காது காவல் செய்பவர்கள் இவர்கள்தான் என்று எண்ணுவார்கள் பொதுமக்கள்.

ஆனால் உண்மை நிலை என்ன? இன்று பதவி வேட்டையாடிக் கொண்டிருப்பவர்கள் கிராமங்களிலே ஜனநாயகம் நல்ல முறையில் வித்தூன்றி வளர்வதற்காக ஏற்பாடு செய்கிறார்களா?

—இல்லவே இல்லை!

அண்மையில் சென்னை அரசாங்கம் ஒவ்வொரு தொகுதிக்கும் ஒரு பஞ்சாயத்து யூனியனை ஏற்படுத்துமாறு ஒரு முடிவு செய்திருக்கிறது. அதோடு பஞ்சாயத்து போர்டின் தேர்தல் குறித்தும் ஒரு விசித்திரமான முடிவினையும் மேற்கொண்டிருக்கிறது.

அதன்படி இனிமேல் பஞ்சாயத்துத் தலைவர் தேர்தல் வாக்காளர்களின் நேரடி ஓட்டளிப்பு மூலம் நடைபெறாதாம்.

ஆனால் தேர்ந்தெடுக்கப்பட்ட பஞ்சாயத்து உறுப்பினர்கள் அனைவரும் ஒன்று கூடிப் பஞ்சாயத்துத் தலைவரைத் 'தேர்ந்தெடுப்பார்களாம்!

—இப்படி ஒரு திருத்தச் சட்டத்தை நிறைவேற்றியிருக்கிறது, சென்னை அரசாங்கம்!

ஏன் இப்படித் திடீரென்று நடைமுறை வழக்கத்தை மாற்றியமைத்தார்கள்? இதற்குமுன் நிலவிய இந்த வழக்கத்தால் ஏதாவது சிரமங்கள் இருந்தனவா?

அப்படிச் சிரமங்கள் எதுவும் இல்லாவிட்டால் என் இந்த மாற்றத்தைச் செய்ய வேண்டும்? அப்படி மாற்றுவதால் என்னென்ன லாபங்கள் கிடைத்துவிடும்?

—இதற்கெல்லாம் போதிய விளக்கம் இல்லை.

—இந்தத் திருத்தச் சட்டம் தமிழகத்தின் பஞ்சாயத்து போர்டுகள் அனைத்தையும் பாதிக்கக் கூடியது.

அமைச்சர்கள் கலந்து கொண்டார்களே; அந்த மாநிலப் பஞ்சாயத்து யூனியனே பஞ்சாயத்து போர்டுகளின் பிரதிநிதித்துவ சபை; அதைப் பார்த்துவிட்டுத்தான் தமிழ் நாட்டையே பார்ப்பதாக கனம் பக்தவத்சலம் கூறினார்; அப்படிப்பட்ட கிராமங்களில் நல்ல முறையில் ஜனநாயகம் அமைந்தால்தான் மத்திய அரசாங்கத்தையே ஜனநாயக அமைப்பு என்று கூறமுடியும்—என்பதாக முன்னாள் மேயர் திருவாய் மலர்ந்தார்.

ஆனால் சென்னை மாநிலத்திலுள்ள அத்தனை பஞ்சாயத்து போர்டுகளையும் பாதிக்கும் திருத்தச் சட்டத்தை நிறைவேற்றுவதற்கு முன்பு சென்னை அரசாங்கம் மாநில பஞ்சாயத்து யூனியனைக் கூட்டி அபிப்பிராயம் கேட்டதா?

இல்லை. முடிவெடுக்கு முன்னர் யோசனை கேட்கவுமில்லை; பிறகு செய்த முடிவைப்பற்றிய விளக்கத்தையும் 'தரவில்லை!

—ஆனால் இந்த யதேச்சாதிகாரப் போக்கிற்கு 'சவால்' விடும் முறையில்; தி. மு. கழகத்தின் சார்பில் மாஜி அமைச்சர் ராமசாமிப் படையாச்சியாரோடு போட்டியிட்ட மேல் குமாரமங்கலம் பஞ்சாயத்துப் போர்டு தலைவர் தோழர் வி. கிருட்டிணமூர்த்தி கல்லதொரு தீர்மானத்தை நிறைவேற்றியிருக்கிறார் அங்கே:

பஞ்சாயத்துத் தலைவர் தேர்தல் முறை இதுவரை இருந்து வந்தது போல, வயது வந்தவர்களின் ஓட்டுரிமை மூலம் நேரடித் தேர்தல் மூலம் நடத்தப்பட வேண்டும்.

பஞ்சாயத்து உறுப்பினர்களைக் கொண்டே தலைவர் தேர்தல் நடத்த முடிவு செய்திருப்பதை மீண்டும் புனராலோசனை செய்ய வேண்டும்.

சமீபத்தில் சென்னை சட்ட மன்றத்தில் நிறைவேற்றிய திருத்தச் சட்டத்தை அமுலுக்குக் கொண்டு வராமல் அரசாங்கம் நிறுத்தி வைக்க வேண்டும்.

—மாநாட்டுத் தலைவர் இராசாராம் நாயுடு இந்தத் தீர்மானத்தை முன்மொழிய விடாமல் தடுத்துவிட முயற்சி செய்த பிறகும்கூட இந்தத் தீர்மானத்தை **600** பேர் ஆதரித்திருக்கின்றனர்; இல்லை, அமைச்சர் பக்தவத்சலனார் கூற்றுப்படி தமிழ்நாடே ஆதரித்திருக்கிறது. ஆறே ஆறுபேர்தான் தீர்மானத்தை எதிர்த்திருக்கின்றனர்.

600

6

—இந்த பேதத்தை அரசாங்கம் உணர வேண்டும்.

600 பேர் நேரடி வாக்கெடுப்பு மூலம் பஞ்சாயத்துத் தலைவர் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்று கூறுகின்றனர்!

அந்த **6** பேரோ, பணத்தைக் கொடுத்து அங்கத்தினர்களை விலைக்கு வாங்கி அதன் மூலம் தலைவராகும் காங்கிரஸ் கட்சியின் கொல்லைப்புற வழிக்குக் கைலாகு கொடுக்கின்றனர்.

—ஜனநாயகம் கிராமத்தில் நன்கு அமைக்கப்பட்டால்தான் மத்திய அரசாங்கம் ஒரு ஜனநாயக அரசாங்கமாக முடியும் என்று வாய் வீச்சு வீசுவதால் மட்டும் மக்கள் ஏமாந்துவிட மாட்டார்கள்; உண்மையிலேயே இந்த வார்த்தைகளை மெய்ப்பிக்க விரும்பினால் அந்த **600** பேருடைய குரலுக்கு அரசாங்கம் உடனடியாக செவி சாய்க்க வேண்டும்!

வாழ்விழந்தோர் தெற்கே; வளம் பெற்ஜேர் வடக்கே!

அன்னிய செலாவணி சிக்கல், வெளி நாட்டு உதவி கிடைப்பதில் தயக்கம் ஆகியவை காரணமாக டில்லி அரசு இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தை வெட்டிக் குறைக்கிறது.

தற்பொழுது ஏற்பட்டிருக்கும் பண நெருக்கடியில் தமிழகத்தின் திட்டங்கள் பல வெட்டப் படுகின்றன. அகில இந்திய காங்கிரசுக் கட்சியின் செயற்குழுக் கூட்டத்திற்குச் சென்றிருந்த சென்னை முதல்வர் திரு. காமராசரும், டில்லி பாராளு மன்றத்தில் அங்கம் வகிக்கும் தமிழகத்து உறுப்பினர்களும் கூடியிருந்த கூட்டம் ஒன்றில் நிதியமைச்சர் திரு. டி. டி. கிருஷ்ணமாச்சாரி அவர்கள் ஏற்படப் போகும் திட்ட மாறுதலினுல் தமிழகம் எந்த அளவுக்குப் பாதிக்கப்படும் என்பதை விளக்கி யிருக்கிருர்:

"நிலக்கரிச் சுரங்கமாக இருக்கும் நெய்வேலியில் நிர்மாணிக்கத் திட்டமிடப் பட்டிருக்கும் இரசாயன உர உற்பத்தித் தொழிற்சாலையும், சேலத்தில் ஆரம்பிக்க உத்தேசித்திருக்கும் அலுமினியத் தொழிற்சாலையும் நிறுத்தி வைக்கப்படும். ஆனல் 40 இலட்ச ரூபாய் முதலீட்டோடு சேலம் அலுமினியத் தொழிற்சாலையைத் துவக்கி நடத்த முன்வரும் தனிப்பட்ட முதலாளிகட்கு அரசாங்கம் ஆதரவு அளிக்கும்" என்று நிதியமைச்சர் டி. டி. கே. பேசியுள்ளார்.

—உணவுப் பிரச்சினையில் இன்று ஏற்பட்டிருக்கும் நெருக்கடியான சூழ்நிலையின் காரணத்தால் நியாய விலைக் கடைகளை இரட்டிப்பாக்கியும், 'மீன் சாப்பிடுங்கள்' என்று போதனை புரிந்தும், வீணுக்காதீர்கள் என்று வேண்டுகோள் விடுத்தும், கோதுமை சாப்பிட விளம்பரம் செய்தும் ஏற்பட இருக்கும் உணவுப் பஞ்சத்தைத் தடுத்து நிறுத்த முயலுகின்றனர் டில்லிவாழ் மூலவர்கள். இந்த அளவிற்கு அக்கரை எடுக்கும் அவர்கள் உர உற்பத்தித் தொழிற்சாலையை ஆரம்ப நிலையிலேயே தடை செய்வது ஆச்சரியத்தைத்தான் தருகிறது. உணவு உற்பத்தி வளர்ச்சி பெற வேண்டுமானல் இரசாயன உரம் பெருமளவிற்குப் பயன்படுத்தப்பட வேண்டும். உணவு உற்பத்தியைப் பெருக்குங்கள் என்று ஒரு பக்கம் போதனை புரிந்து கொண்டு மறுபக்கம் உணவு உற்பத்திக்கே அடிப்படையான உர உற்பத்தியைப் பெருகவிடாமல் தடை செய்வது வேடிக்கையாக இருக்கிறது. 'அன்னவிசாரம் அதுவே விசாரமாக' நாடு தத்தளிக்கும் நிலையில் இதுபோன்ற திட்டங்களை வெட்டிக் குறைப்பது வேண்டாத பஞ்சத்தை விலை கொடுத்து வாங்குவதாகும்.

சேலத்தில் அலுமினியத் தொழிற்சாலையை 40 லட்ச ரூபாய் முதலீட்டோடு துவக்கி நடத்த முன்வரும் முதலாளிக்கு ஆதரவு தருவதாக அரசாங்கம் கூறுவது மற்றொரு வேடிக்கை. 40 லட்சரூபாய் முதலீடு செய்யுமளவிற்கு வசதியும், வாய்ப்பும், பணமும், நிலையும் உள்ள தனிப்பட்ட முதலாளிகள் யாரும் தென்னகத்தில் இல்லை—என்பது தெளிவு. எனவே மாதிரி சமதர்ம திட்டத்தைக் குறிக்கோளாகக் கொண்டு இயங்கும் காங்கிரசு அரசு இதன் மூலம் வடநாட்டு வால்சந்து, ஹீராசந்துகளுக்குத் தென்னுட்டை வட்டிக்கடையாகவும், வாணிபச் சந்தையாகவும் மாற்றிக் கொடுக்கிறது என்பதுதான் இதன் மூலம் உறுதியாகிறது.

ஆண்டு வருமானம் ஆயிரம் ரூபாய்

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சென்னை மாநிலத்துக்கு டில்லி தேவதைகள் அருள் பாலித்த தொகை 153 கோடிரூபாய் மட்டும்தான். மற்ற மாநிலங்கள் பெற்றுள்ள வளர்ச்சியோடும் தொகையோடும் இத்தொகையை ஒப்பிட்டு பார்க்கும் பொழுது இது மிகக் குறைவு என்று யாருமே சொல்வர். ஆனல் வடநாட்டிலே பலகோடி ரூபாய்களை விழுங்கிக் கொண்டு அணைக் கட்டுகளும், மின்னுற்றல் நிலையங்களும், தொழிற்சாலைகளும் உருவாகின்றன. எடுத்துக் காட்டாக பஞ்சாபில் உருவாகி வரும் பக்ரா நங்கல் திட்டத்துக்கு மட்டுமே 176 கோடி ரூபாய் ஒதுக்கப் பட்டுள்ளது. பெரிய மாநிலமான சென்னை முழுவதற்கும் ஒதுக்கப்பட்ட தொகை 153 கோடி ரூபாய்; ஆனல் பஞ்சாப் மாநிலத்தில் வளருகின்ற ஒரே ஒரு திட்டத்துக்கு மட்டும் 176 கோடி ரூபாய் என்று நாம் ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது டில்லி புரியும் ஓரவஞ்சனை நமக்குத் தெள்ளத் தெளிய தெரிய வருகிறது. எனவேதான் நேரு பண்டிதர் டில்லியில் கூடிய காங்கிரசுப் பேரவையில் கம்பீரமான குரலில், புன்னகை தவழ, பூரிப்போடு பஞ்சாப் மாநிலத்தில் ஒரு கிராமத்தில் ஒரு தனி நபரின் ஆண்டு வருமானம் ஆயிரம் ரூபாயாக உயர்ந்துள்ளது. இது இந்திய மக்களின் சராசரி ஆண்டு வருமானத்தைப்போல் நான்கு மடங்கு அதிகமானது' என்று பேச முடிகிறது. இந்திய மக்களின் சராசரி வருமானம் ஆண்டுக்கு 270 ரூபாயாக இருக்கும் பொழுது பஞ்சாப் மக்கள் மட்டும் 1000 ரூபாய் பெறுவது எப்படி என்ற கேள்வி எழலாம். காரணம் வடநாட்டிலே கோடிக் கணக்கான ரூபாய்களைக் கொட்டி துவக்கப் படுகின்ற பெரிய பெரிய திட்டங்களில் வேலை செய்ய வாய்ப்பு கிடைக்கிறது. அதனுல் அவர்கள் வருமானமும், வாழ்க்கைத் தரமும் உயர்ந்துள்ளது. இதுதான் வடக்கு வாழ்வதின் இரகசியம்.

நிதிக் குழுவின் சதி

"நிதிக் குழு சென்னைக்கு நான்கு கோடி ரூபாய் சிபார்சு செய்யுமென்று எதிர்பார்த்தேன். ஆனல் இரண்டு கோடி ரூபாயே சிபார்சு செய்தது" என்று தனது ஏமாற்றத்தை சோகத்தோடு அழாக் குறையாக சட்டசபையில் நிதியமைச்சர் திரு. சுப்பிரமணியம் தெரிவித்துள்ளார்.

"எதிர் பார்த்ததற்கு மிகுதியாகச் சில மாகாணங்களுக்கு இந்தியப் பேரரசின் வருமானத்திலிருந்து அதிகப் பங்கீடு கிடைக்கும்படி நிதிக் குழு ஆலோசனை கூறியிருக்கிறது. ஆனல் சென்னை மாகாணத்தைப் பொறுத்த வரையில் குழுவின் ஆலோசனைகள் தேவைக்குத் தக்க உதவி அளிக்கும் தன்மையில் அமையாதது வருந்தத்தக்கதாகும்" என்று கூறி 'தமிழ் நாடு' நாளிதழ் கண்டித்திருக்கிறது.

மேலும் இதைப் போலவே ஆந்திர மாகாணத்தின் நிதி அமைச்சராகிய திரு. கோபால ரெட்டியும் தமது மாகாணத்துக்கு ஒதுக்கப்படும் பங்கீட்டைப் பற்றிக் குறை கூறியிருக்கிருர். ஆந்திர அரசு எதிர் பார்த்த அளவிற்கு இந்திய வரித்தொகுதிப் பங்கீடு அமையவில்லை என்று அவர் குறிப்பிட்டிருக்கிருர். இதனுல் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தை முழுதும் நிறைவேற்றுவதென்பது ஆந்திர அரசின் முன்னுள்ள கடினமான சிக்கலாகத் தொடர்ந்து நிற்கிறது என்று அவர் கூறியிருக்கிருர்.

ஆங்கில நாளிதழான 'மெயில்' தனது கண்டனத்தை 22—11—1957-ம் நாள் இதழ் மூலம் தெரிவிக்கிறது.

திராவிடர் நாட்குறிப்பு-1958.

இதில் அண்ணுவின் 365 பொன்மொழிகள், தலைமைக் கழக செயற்குழு, பொதுக்குழு விவரங்கள், பேச்சாளர் முகவரி, தபால் தந்தி. ஆவணப்பதிவு, வருமான வரி கட்டண விவரம் உள்ளன.

டயரி 1-க்கு ரூ. 1-2-0. கழிவு 20-சதவீதம். செலவு தனி. ஒரு டயரி வேண்டுவோர் ரூ. 1-12-0 அனுப்பவும்.

தி. மு. க. காலண்டர்

15 தி. மு. க. தலைவர்களின் உருவங்கள் அடங்கிய 15—20 அளவுள்ள மூவர்ண படம் 1-க்கு 6 அணு. மேற்படி காலண்டர் 1—க்கு அணு 8. கழிவு 20 சதவீதம். 50 வகை பொங்கல் வாழ்த்துக்கள் உள்ளன. மாதிரி செட் 1—க்கு ரூ. 3—8—0 அனுப்பவும்.

போர்வாள், 128, பிராட்வே, சென்னை—1.

தேசிய ஏடான "சுதேசமித்திரனும்', "வருமான வரி வசூலில் முன்னணியிலுள்ள ராஜ்யங்கள் பம்பாய், மேற்கு வங்கம், சென்னை ஆகியவை. வசூலின் ஆதாரத்தின் பேரில் இவைகளுக்குக் கிடைத்து வந்த இருபது சத விகிதமும் இப்போது பாதியாகக் குறைக்கப்பட்டு விட்டது. இந்த வெட்டு முக்கியமாகச் சென்னையைப் பாதிக்கக் கூடியது. பம்பாய், மேற்கு வங்காளம்போல இங்கு தொழில் வளம் அதிகமில்லை. மேலும் மேற்கு வங்காளத்திற்கு, மத்திய சர்க்காரிடமிருந்து தனி உபகாரப் பணமாக மூன்றே கால் கோடி ரூபாய் கிடைக்க இருக்கிறது. இந்த வகையில் மொத்தத்தில் மத்திய சர்க்கார் பல ராஜ்யங்களுக்கு 40 கோடி ரூபாய் கொடுக்க சிபாரிசு செய்திருக்கிறது. இந்த ராஜ்யங்களின் ஜாபிதாவில் மற்ற தென்னிந்திய ராஜ்யங்களைச் சேர்த்திருக்க சென்னையை மட்டும் ஒதுக்கியிருப்பது ஆச்சரியமாகும்" என்று எழுதி ஆச்சரியப் படுகிறது.

ஏன் இந்த இழிநிலை சென்னைக்கு-என்ற கேள்விக்கும் நிதியமைச்சர் திரு. சுப்பிரமணியம் அவர்களே விளக்கம் தருகிருர். "நாமும் மற்றவர்களைப்போல, நிதிவிஷயத்தில் பொறுப்பற்று நடந்திருந்தால் டில்லி உதவியிருக்கும்," என்று வெட்கம் கலந்த வேதனையை தன் உள்ளத்தைத் திறந்து வெளிப்படுத்தியுள்ளார்.

பொருளாதாரத் துறையில் தாறுமாறுன போக்கில் சென்ற மாநிலங்கள் மிகுதியான பங்கீடு பெறுவதை மறைமுகமாகச் சுட்டிக் காட்டுகிருர் நமது அமைச்சர்.

மற்றொரு காரணம், டில்லி குட்டக் குட்டக் குனிந்து கொடுக்கும் தன்மை சென்னையிடம் வளர்ந்துள்ளது. டில்லித் தேவதைகளின் கட்டளைக்குக் கீழ்ப்படியும் தன்மை சென்னையிடம் உள்ளது என்பதை சென்னை மேல்சபையில் எதிர் கட்சித் தலைவர் திரு. வி. கே. ஜான் அவர்களும், டாக்டர். இலட்சுமணசுவாமி முதலியார் அவர்களும் பலமுறை எடுத்துக் கூறியுள்ளார்கள். அண்மையில் டில்லியில் நடந்த காங்கிரசுக் கட்சியின் செயற்குழுக் கூட்டத்தில் "சென்னை முதன் மந்திரி வாய் திறக்கவே யில்லை" என்று இங்குள்ள தேசிய ஏடுகள் கொட்டை எழுத்தில் வெளியிட்டுள்ளன. 'ஊமை குடியைக் கெடுக்கும்; பெருச்சாளி வீட்டைக் கெடுக்கும்' என்று ஒரு பழமொழி சொல்லுவார்கள். ஆனல் நிச்சயமாக இந்திய அரசியல் அரங்கில் இந்த ஊமைக் கோலம் நம் நாட்டைக் கெடுக்கும் என்பதில் கிஞ்சித்தும் ஐயமில்லை.

மூன்னுள் டில்லி அமைச்சரும் இப்போது நிதிக் குழுவின் தலைவருமான திரு. கே. சந்தானம் அவர்கள் தெக்கணம் திகைக்கிறது என்பதை "பெரிய தொழிற்சாலைகள் அனைத்தும்

[தொடர்ச்சி பக்கம்—12]

இது வரை...

- வரலாற்றுப் புகழ்பெற்ற 1024-ம் ஆண்டு...
- இந்து மதத்தின் இதயமும், சனாதனக் கோட்டையுமான சோமநாதபுரத்து ஆலயத்தைத் தகர்த்தெறிய பாசறை அமைத்திருக்கும் கஜினி, ஒரு நாள் இந்துப் பெண் புவனாவின் குழந்தையை ஓநாயின் வாயிலிருந்து மீட்கிறான்; ஆனால், உள்ளத்தை புவனாவிடம் பறிகொடுத்து விடுகிறான்....
- க்ஷயம் பிடித்திருந்த புவனாவின் கணவனுக்காக ஆண்டவனை வேண்ட, சோமேசர் ஆலயத்துக்குச் சென்ற புவனாவின் கற்பை, கடவுளின் பெயரால் காணிக்கை கேட்கிறான், தலைமைப் புரோகிதன். அந்த மிருகத்திடமிருந்து அவளைக் காப்பாற்றுகிறார், நிர்மலானந்தர் தன் பெயர்; மதுராபுரி தன் ஊர்—என்று சொல்லிக் கொள்ளும் ஒரு புதிய சாது! பின் அவர் திலோத்தமா என்ற தேவதாசியைச் சந்திக்கிறார். முற்றும் துறந்திருக்க வேண்டிய அந்த இந்துச் சாதுவிடம் தன் அன்பைச் சொரிகிறாள் திலோத்தமா....
- புவனாவின் கணவன் இறந்து விடவே, அவனுடன் உடன்கட்டை ஏறுகிறாள் புவனா. ஆனால் சிதையிலே உள்ள இரகசிய வழி மூலம் மீட்டு, அவளைத் தன் தனி அறையில் சிறை வைக்கிறான் தலைமைப் புரோகிதன்....
- இதற்கிடையில், கஜினி சோமேசரின் ஆலயத்தைத் தூளாக்கும் பணியிலே ஈடுபட்டு விட்டான் என்ற செய்தி கிடைத்ததும், திலோத்தமாவை புவனாவுக்குக் காவலாக வைத்து விட்டு ஓடுகிறான். திலோத்தமாவின் பெண்மையோ புவனாவைத் தப்புவிக்கிறது. ஆனால் புரோகிதனின் கழுகுக் கண்களிலிருந்து புவனா தப்பிவிட முடியவில்லை...
- புவனாவின் கற்பைச் சூறையிட முயலும்போது, தலைமைப் புரோகிதனைக் கைது செய்த கஜினி, அவனைத் தூக்கிட்டுத் தொங்கும்படிக் கட்டளையிடுகிறான். அப்போது திடீரென்று அங்கு வந்த திலோத்தமா, 'புவனாவின் கற்புக்குக் களங்கம் விளைவிப்பானோ கஜினி' என்று எண்ணி கட்டாரியை அவன் மேல் வீசுகிறாள். கஜினியின் இரும்புக் கவசம் அவனைக் காப்பாற்றுகிறது. கைது செய்யப்படும் திலோத்தமாவிடம் 'சாகுமுன் ஆசை என்ன?' என்று கேட்கிறான் கஜினி. தான் ஒரே ஒருநாள் மட்டுமே சந்தித்த—ஆனால் தன் இதயத்தில் நல்லிடம் பெற்று விட்ட சாது நிர்மலானந்தரை எப்போதாவது சந்தித்தால் அவருக்கு எந்தத் தீங்கும் இழைக்கக் கூடாது—என்று வேண்டுகிறாள், அவள்...
- கஜினி புவனாவின் துவண்டு போன உடலைத் தூக்கிக் கொண்டு புறப்படுகிறான்... ஆலயத்தின் மத்தியிலே தூக்கில் தொங்கிக் கொண்டிருக்கிறான், துரோகத்தின் உருவம் — தலைமைப் புரோகிதன்...
- இனி, மேலே படியுங்கள்......

சோமநாதபுரத்துச் சிலை

பி.சி. கணேசன் பிஎஸ்ஸி.பி.டி.

14

காவலில் வைக்கப்பட்ட திலோத்தமாவுக்கு, தண்டனை ஏன் இன்னும் நிறைவேற்றப் படவில்லை என்ற ஐயம் அடிக்கடி எழும்பிக் கொண்டிருந்தது. புவனாவை ஒரு முறையாவது பார்த்து, சில வார்த்தைகள் பேச வாய்ப்பில்லாமல் போய் விட்டதை எண்ணி வருந்தினாள். புவனா, எவ்வளவு நல்லவள்; கணவனிறந்த பின் வாழச் சம்மதியாமல் உடன்கட்டை ஏறத் துணிந்த அந்த உத்தமியையும், நாயினும் இழிந்த தன்னுடைய வாழ்க்கையையும் எண்ணிப் பார்த்தாள். தனக்கே உரிமையான ஒருவனிடம் அன்பு செலுத்தி, அவனுடைய சுக துக்கங்களில் சமபங்கு பெற்று, அவன் சிரித்தால் சிரித்தும், அழுதால் அழுதும், அவனுடைய பெருவாழ்வு கண்டு பெருமிதத்தால் பூரித்து, இல்லற இன்பத்திலிருந்து விளைந்த அன்புக் குழந்தைகளை இட்டும் தொட்டும், எடுத்தும் சுவைத்தும் அனுபவிக்கும் அந்த வாழ்க்கை கடைசி வரையில் கிட்டாமலே போய்விட்டதே என எண்ணி உருகினாள். லட்சியமற்று, மனிதப்பண்பு மறந்து, ஒழுங்கீனமாக வாழ்ந்த புரோகிதர்களோடு அவள் வாழ்ந்த மிருக வாழ்க்கை அவள் மீதே அவளுக்கு வெறுப்பை உண்டாக்கியது. வாழ்க்கையில் எந்த ஒரு ஜீவனிடமும் அவள் அந்தரங்க அன்பு செலுத்தியதில்லை. புரோகிதர்கள் அவளிடத்திலே சுகத்தைக் கண்டார்களே தவிர, அவள் அவர்களுடைய உறவை வேம்பென வெறுத்தாள்; நெருப்பெனப் பயந்தாள். ஆனால், அவள் வாழ்க்கை...? அவர்கள் நிர்ணயித்தது தானே அவள் வாழ்க்கை? அவள் வாழ்க்கையில் அவளுக்கென்ன உரிமை இருந்தது...?

எத்தனையோ சமயங்களில் ஏதோ ஒரு ஜீவனிடத்தில் தன் அன்பையெல்லாம் கொட்டிவிட வேண்டும் போன்ற உணர்ச்சி தோன்றி அவள் துடித்ததுண்டு. ஆனால், அதற்கேற்ற அந்த ஜீவன்...! அவள் தேடித் தேடி அலைந்தாள்; அது கிட்டவேயில்லை; அவள் முற்றிலும் விரக்தி மனப்பான்மையோடிருந்த சமயம், நிர்மலானந்த சாது அவளுடைய வாழ்க்கையில் குறுக்கிட்டார். அவர் அவளோடு இருந்தது சில நாழிகைகள்தான். அந்த சில நாழிகைக்குள் உள்ளத்தில் தேக்கி வைத்திருந்த அன்பையெல்லாம் ஒரு முகமாக அவர்மீது செலுத்தினாள். அவர் உலகத்தைத் துறந்த சாது என்பதைப்பற்றியோ, அவள் வாழும் உரிமை அளிக்கப்படாத கணிகை என்பதைப் பற்றியோ அவள் சிறிதும் கவலைப்படவில்லை; அவருடைய பாதங்களைக் கழுவுவதிலும், அவருக்கு உணவு படைத்து அவர் உண்பதைப் பார்த்து மகிழ்வதிலும் எல்லையில்லா இன்பம் கண்டாள். அவர் தூங்கியபோதும், யாழெடுத்து இசைத்து இன்பமூட்ட முயன்றாள். அதைக் கேட்டு அவர் எழுந்தபோது, இசைதான் அவருடைய தூக்கத்தைக் கலைத்து விட்டதோ என எண்ணி ஏங்கினாள். நிர்மலானந்தரின் கரம் அவள் தலையைக் கோதியபோது, எல்லையில்லா இன்பவாரிதியில் மூழ்கித் திளைத்தாள்...இந்த சாது யார்? அவரிடத்தில் அவளுக்கு ஏன் இவ்வளவு வாஞ்சை? தர்க்க வாதத்துக்குள் அகப்படாத அந்த ஆன்மநேய உணர்ச்சி தான் காதலா...? அப்படியானால், அவள் நிர்மலானந்தரிடத்தில் கொண்டிருப்பதும் காதல் தானா?

திலோத்தமாவின், உடல் காவலில் இருந்ததே தவிர, உள்ளம் எங்கெங்கோ சிறகடித்துப் பறந்து சென்று கொண்டிருந்தது!

நிர்மலானந்தரின் உருவம் அவளுடைய இதய வெளியில் தோன்றித் தோன்றி மறைந்து கொண்டிருந்தது. எந்த ஒருவரின்மீது அவளுடைய உள்ளம் அந்தரங்கமாக ஈடுபட்டதோ, அவர் உயிர் பிழைக்க—துன்பப்படாமலிருக்க—சலுகை பெற்று விட்டதை எண்ணி மனம் பூரித்தாள். வாழ்க்கையில் நிர்மலானந்தர் குறுக்கிட்டதும், அவரிடம் அவள் மனம் ஈடுபட்டதும், அவர் துயரம் நீங்க அவள் காரணமாகும் வாய்ப்புப் பெற்றதும் அவள் செய்திருந்த பாபங்களுக்கு ஏற்ற கழுவாய் என எண்ணி மன நிம்மதியடைந்தாள். ஆம்; இனி அவளுக்கு வாழ்க்கையில் என்ன இருக்கிறது? மரணம்! அது ஒன்று தான் பாக்கி! அதை ஏற்றுக் கொள்ள அவள் வருந்தவோ பயப்படவோ தேவையில்லை. மரணம் — எப்பொழுது அது வரும் என்று நிம்மதியாகக் காத்திருந்தாள். அது வராமலிருப்பதுதான் அவளுக்குப் பெரும் வேதனையாக இருந்தது.

எண்ணங்களில் மூழ்கியிருந்த திலோத்தமா யாரோ வரும் ஓசை கேட்டுத் திரும்பினாள். அவள் ஆச்சரியத்தில் மூழ்கும்படியாக நிர்மலானந்தர் அவளை நோக்கி வந்து கொண்டிருந்தார். தூக்கு மரத்தில் மாட்டித் தொங்கவிட கொலைகாரர்களை எதிர்பார்த்தவளுக்கு அன்புருவான சாது காட்சியளித்தார்! இன்பம் நிரம்பிய அதிசய உணர்வு அவளுடைய உள்ளத்தில் பரவி நின்றது.

"திலோத்தமா!"—அன்பு மயமாக ஒலித்தது சாதுவின் குரல்.

"சுவாமி!"—தாயைக் கண்ட கன்றுபோல் பாய்ந்து போய் அவருடைய மார்பில் தலையைப் புதைத்துக் கொண்டு 'விக்கி விக்கி' அழுதாள். "சுவாமி! எப்படி இங்கு வந்தீர்கள், சுவாமி?" என்றாள் ஆச்சரியத்துடன்.

"திலோத்தமா, உன்னைப் போன்ற பெண்ணொருத்தி அன்பு காட்டும்வரை எனக்கென்ன குறை? உன் தூய அன்புதான் என்னைக் காப்பாற்றி, உன்னை மீண்டும் காண்பதற்கு எனக்கு வாய்ப்பளித்திருக்கிறது..."

[தொடர்ச்சி பக்கம்—8]



அன்புள்ள பொன்மொழி!

"நிழல் நிறைந்த பூஞ்சோலைகள் செறிந்த வழி! அந்தச் சோலைகளில் வள்ளிக்கிழங்குகள் தோண்டி எடுக்கப்பட்ட குழிகள். அக்குழிகளின்மேல் சண்பக மலர்கள் உதிர்ந்து குழிகளை மறைத்துக் கொண்டிருக்கும். அதைச் சரியாகக் கவனிக்காமல் நடந்தோமேயானால் குழிகளில் விழுந்து துன்புறுவோம். பூக்கள் மூடிய அக்குழிகளைவிட்டு ஒதுங்கி நடப்போமென்றாலோ தாழ்ந்த கிளைகளில் தொங்கிடும் தேன் முதிர்ந்த பலாப்பழங்கள், பகைவர்போல நம் தலையில் முட்டும். இதனையும் விட்டு விலகிப் போவோமென்றால் இஞ்சியும் மஞ்சளும் விளைந்திருக்கும் பாத்திகள் ஏராளம். அதிலே சிதறிக் கிடக்கும் பலாக் கொட்டைகள் கால்களில் குத்தி வருத்தும்.

வயல் வழி நடப்போமென்றால் அவ்வழியில் உள்ள குளங்களில் நீந்திடும் கெண்டை மீன்களை ஓட்டும் வாளை மீன்களை நீர் நாய்கள் கௌவிட, அவைகள் தாவிப் பாய்ந்து வயல் வரப்புகளில் துள்ளிக்கொண்டிருக்கும்...

கரும்பு வயல் வழி போவோமென்றால் அங்கேயுள்ள பெரிய தேன் கூடுகள் உடைந்து அருகேயுள்ள பொய்கையில் தேனைக் கொட்டி தேனும் நீரும் கலந்துவிடும்.

களை எடுக்கும் பாட்டாளிகள் வயலில் பிடுங்கிய குவளை மலர்களை வரப்புகளில் குவித்து வைத்திருப்பார்கள். அம்மலர்களில் வண்டினங்கள் மொய்த்திருக்கும். வரப்பிலே நடக்கும்போது நம்மையறியாமல் வண்டுகளை மிதித்து கொலைப்பழிக்கு ஆளாகி விடுவோம்.

வாய்க்கால் வழியைத் தேர்ந்தெடுப்போமென்றால் அவ்வழிகளில் புள்ளி தோய்ந்த அழகிய நண்டுகளும் நத்தைகளும் காலில் மிதிபடும்.

தாமரை நிறைந்த குளங்களில் சம்புங்கோழி, நாரை, அன்னம், கொக்கு, காட்டுக்கோழி, உள்ளான், குளுவை, நீர்க் காக்கை, பெருநாரை முதலிய பறவைகள் போர்க் களத்தின் ஒலியினை எழுப்பிக்கொண்டிருக்கும்......அப்படிப்பட்ட வழிதான் நாம் நடந்து செல்ல வேண்டிய வழியாகும்."

புது வாழ்வு காண்பதற்காகத் துணைவி கண்ணகியுடன் மதுரை நோக்கிப் புறப்பட்ட கோவலனுக்குக் கவுந்தியடிகள் என்னும் சமணத் துறவி எடுத்துரைத்த வழிச் சிறப்பையே உனக்கு நினைவூட்டுகிறேன். பத்தினியாம் கண்ணகியின் பட்டுப் பாதங்களில் பலாக்கொட்டை குத்துவதையும் பெரும் இடராகக் கருதி வருந்துகிறான் கோவலன். தலையிலே பலாக்கனி முட்ட, வழியிலே தேன்கூடு சிந்திட, வரப்பிலே வண்டுகள் நசுங்கிட......வழிப் பயணம் போகவேண்டியிருக்கும் என்று கவுந்தியடிகள் எச்சரிக்கை செய்கிறார். சிலப்பதிகார ஆசிரியர், கண்ணகிக்கு — வழியிலே உள்ள பயத்தையும், நமக்கு தமிழகத்திலேயிருந்த வளத்தையுமன்றோ இத்துணை சிறப்பாக எழுதிக் காட்டுகின்றார். தேனும் பலாவும் வண்டும் நண்டும் நிறைந்த வழி, மலர் குவிந்து மீன் துள்ளும் வயலோரப் பாதை, புது வாழ்வு காண்பதற்குப் புறப்பட்டோர் நடந்து சென்ற மார்க்கம்!

நீட்டோலை

மு. கருணாநிதி

உள்ளத்திலே புயலும், கண்களிலே புனலும் கொண்டவர்கள் நடந்திட்ட வழி வளம் சிந்தும் வழியெனினும் அதைச் சுவைக்க முடியாமல் துன்பத்தைச் சுமந்து செல்லும் கட்டத்திலே கண்ணகி கோவலன்விடப் படுகிறார்கள். அந்த வேதனை நிரம்பிய வேளையிலும் தமிழகத்தின் எழிலோவியத்தைத் தீட்டிக் காட்டுகிறார்; தீரனும் சேரனின் தம்பி இளங்கோ!

பலாவும், பூவும், மீனும், தேனும் குறுக்கிடும் வழியே பயமூட்டும் வழியாகத் தோன்றிடும் அளவுக்கு அவர்கள் சிந்தை நொந்திருந்தார்கள் எனில், பருக்கைக் கல்லும், பாம்புக் கூட்டமும், பாறையும், முள்ளும், பயங்கரப் புயலும் சூழ்ந்திருக்கும் வழியிலே பயணம் நடத்துகின்ற நமது நெஞ்சங்கள் — அதிலும் ஏற்கனவே எரிமலை யெனக் குமுறிக் கொண்டிருக்கிற நெஞ்சங்கள்—படும் வேதனை எவ்வளவு என்பதை விளக்கவும் வேண்டுமோ?...

சிலப்பதிகாரம் காட்டுகின்ற தென்னகத்தின் சிறப்பையும் வளத்தையும் படிக்கின்றோம். அந்த வளம் இருந்ததற்கு அடையாளமாகச் சில இடங்களையும் காணுகின்றோம். இது போல் தமிழக மெங்கணும் வளம் கொழிக்க ஏட்டளவில் இருக்கும் சிலப்பதிகார எழில் நாட்டளவில் வந்துவிட விரும்புகின்றோம். விருப்பத்தை நிறைவேற்றிக் கொள்ள விடுதலையைத் தவிர வேறு வழியில்லையென்று முடிவு காணுகின்றோம். அந்த விடுதலை வழியிலேதான் பாம்புக் கூட்டம், பருக்கைக் கல், காடு, மேடு அத்தனையும் கடக்க வேண்டிய நிலைக்கு ஆளாகிறோம்.

நீ கேட்பாய்; எனக்குத் தெரியும்—"என்னப்பா காடு மேடு; கல் முள் என்கிறாய்; வளம் நிறைந்த வண்டிப் பெரியாருக்கு இப்போதுதானே போய் வந்தாய்?" என்று!

வண்டிப்பெரியாருக்குப் போனேன் — உண்மைதான்! கேரளத்துப் பகுதியிலே தேவிகுளம், பீர்மேடுப் பிரதேசத்திலே, எழில் குலுங்கும் ஏரியும், இயற்கை வளம் செறிந்த மலைகளும், மலைகளில் தோட்டங்களும், தோட்டங்களில் பசுமை நிறை தேயிலைச் செடிகளும், செடிகளில் இரு இலை ஒரு மொக்கைத் தளிர் கரங்களால் கிள்ளியெடுக்கின்ற தமிழ்க் குலமகளிரும் — கண் கொள்ளாக் காட்சிதான்! ஆயினும் அக்காட்சியினைப் பார்க்கும்போது, "அடிமைகள் நாம்" என்ற முள் சுரீர் என்று குத்துகிறதே—காலிலே அல்ல; கருத்திலே!

கோவை மாவட்டத்தைச் சேர்ந்த கோபியிலே முதல் நாள் கூட்டம்— சுற்றுப் பயணத்தின் துவக்கம் அங்கேதான்! சேலத்திலிருந்து கோபி செல்லும் வழியிலே எத்தனை காட்டு வாய்க்கால்களைக் கடக்க வேண்டியிருந்தது நாங்கள்! ஒரு வாய்க்காலில் கார் பாதிக்குமேல் முழுகி விட்டது. ஊர் மக்கள் ஐம்பது அறுபது பேர் வந்து காரைத் தூக்கிக் கரையில்வைத்தார்கள். அருகிலே ஊர் இல்லாது போயிருந்தால், காரை தெப்பமாக மிதக்க விட்டு விட்டு நானும் நண்பர்களும் வேடிக்கை பார்க்க வேண்டியதுதான்!

கூடவந்த பண்ணை முத்து கிருஷ்ணனோ கார் உயரம்! முல்லைசத்தியோ என்னைப்போல பலசாலி! எங்களால் காரை மீட்டிருக்க முடியுமா?...... எப்படியோ தப்பினோம்—கோபியில் மிகப் பெரிய கூட்டம்—அலங்காரமிகுந்த ஏற்பாடுகள்-ஊரே விழாக் கோலம் பூண்டிருந்தது. மாநாடுபோல சிறப்பு மிளிர்ந்தது. நமது கூட்டத்திற்கு இரண்டு நாட்களுக்கு முன்னர்தான் மந்திரி கக்கனும் மற்றும் சில காங்கிரஸ் பிரமுகர்களும் நம்மையும் நமது கழகத்தையும் நாக்கு எரிச்சல் தீருமட்டும் வசைபாடித் தீர்த்தார்களாம். அவர்கள் ஆற்ற... துச்சமென மதித்...

வெறுப்பூட்டும் வடக்கு!

"நான் கிராமப்புறங்களில் பேசும்போதெல்லாம் பக்ரா நங்கலைப் பற்றியோ, இராகுட் அணைக்கட்டைப்பற்றியோ, சிந்திரி—சித்தரஞ்சன் தொழிற்சாலைகளைப்பற்றியோ புள்ளி விவரம் காட்டிப் பேசுவதில்லை. இரண்டே இரண்டு காரணங்களைத்தான் சொல்லுவேன்.

"'வடக்கே தலைவைத்துப் படுக்காதே' என்று ஒரு பழமொழி உண்டு; இது, தி. மு. கழகம் தோன்றுவதற்கு முன்பே ஏற்பட்ட பழமொழி. எனவே, அந்தக் காலத்திலிருந்தே வடநாட்டின்மீது தமிழருக்கு வெறுப்பு இருந்திருக்கிறது. வடக்கே நெடுநாளாக அக்கிரமக்காரர்கள் இருந்திருக்கின்றனர்; அதைத்தான் தி. மு. கழகம் சொல்லுகிறது- என்று நான் சொன்னால், கூட்டத்திலுள்ள தாய்மார்களும் கிழவர்களும் வாலிபர்களும் 'அப்படியா?' என ஆச்சர்யப்படுகின்றனர்; இல்லையென்றால், இந்தப் பழமொழியின் உட்பொருள் என்ன? யாரோ அக்கிரமக்காரன் வடக்கிலிருந்து கொண்டு தமிழர்களை அடக்கப் பார்த்தான்; அதனால் ஏற்பட்டதுதான் இப்பழமொழி.

"மற்றொன்று; தமிழ் இலக்கியத்திலே, 'வடக்கிருத்தல்' என்று ஒன்றுண்டு; வாழ்க்கையிலே சலிப்பு ஏற்பட்டு உயிர் துறக்க எண்ணுபவர்கள் வடக்கு நோக்கி இருந்து பட்டினிக் கிடந்து சாவார்கள்; அதுதான் வடக்கிருத்தல்!

"எப்படிப் பட்டினிக் கிடந்து செத்த நமது முன்னோர்கள், வடக்கே பார்த்து உயிர்விட்டார்களோ, அதேபோல் நாம் இன்று உணவு—மானம்—அரசியல்-பொருளாதாரம், மற்றும் எல்லாத் துறைகளிலும் வடக்கே பார்த்து வாழ வேண்டியுள்ளது. வடநாட்டு ஆதிக்கத்திலிருந்து விடுபட வேண்டும் என்று சொன்னால், அதை கிராம மக்கள் நன்றாகப் புரிந்துகொள்கிறார்கள்.

—அறிஞர் அண்ணா.

தூசெனக் கொண்டு, தொகை தொகையாய் மக்கள் கூடினர்— திராவிட துந்துபி முழங்கினர். அன்றிரவே புளியம்பட்டியில் கழகத் தோழர்கள் கலை விருந்து தந்தனர்; நச்சுக் கோப்பை நாடக வாயிலாக!

அடுத்த நாள் குளித்தலைத் தொகுதியிலே முடிந்தவரை பல ஊர்களில் சுற்றி ஆங்காங்குள்ள மக்களைக் கண்டோம். தொகுதி வேலைகளை இரண்டு நாள் கவனித்துவிட்டு, வண்டிப்பெரியார் சென்றோம்.

வழிநெடுக பலாக்கனிகள் தலையில் முட்டின. பூக்கள் சிதறிக் கிடந்தன. மீன்கள் துள்ளி விழுந்தன. தேன் கூடுகள் உடைந்தன. நண்டுகள், நத்தைகள் கால்களில் மிதிபட்டு நடப்பதற்கே இடையூறு செய்தன.

ஆமாம் பொன்முடி; அன்பு வயப்பட்டு நமது தோழர்களும் பொதுமக்களும தந்த உற்சாகமான வரவேற்பைத்தான் இது போலக் குறிப்பிடுகிறேன். இருமருங்கிலும் பெருந்திரளான மக்கள் நின்று மலர் இரைத்த காட்சியை மறந்திடத்தான் முடியுமா?

குமிழியிலிருந்து வண்டிப்பெரியார் வரை ஏறத் தாழ ஐந்து மைல் நீளத்திற்கு வழியெல்லாம் அவர்கள் அமைத்திருந்த வரவேற்பு வளைவுகளைத்தான் மறந்திட வொண்ணுமா? நம் கார்மீது பறந்த கொடிக் கம்பத்தை உடைத்துவிடும் அளவுக்கு ஏம்மீது விழுந்து அவர்கள் காட்டிய அன்பின் பெருக்கைத்தான் குறைத்து மதிப்பிட முடியுமா?...அதை எண்ணினால் சிலப்பதிகாரத்தில் தலையில் முட்டும் பலாக் கனியின் நினைவு தானே எதிர் வந்து நிற்கிறது.

அந்த இன்ப எண்ண அலைகளினூடே "நாமெல்லாம் அடிமைகள்" என்ற அதிர்ச்சி...வாளைமீன் வரப்பிலே துள்ளிப் பயமுறுத்துவதுபோலில்லையே பொன்முடி; வாளொன்று நெஞ்சிலே பாய்வதுபோலல்லவா இருக்கிறது! புதிதாகப் பொதுவுடமையினர் ஆளுகின்ற பகுதிக்குப் போய்விட்டோமாம்; அடடா—அந்தக் கட்சியினருக்கு ஏற்பட்ட ஆத்திரம்...கேள்வி மேல் கேள்வி கேட்கத் துவங்கிவிட்டார்கள். கேரளத்திற்கும் சேர்த்துத்தான் சுதந்திரம்கேட்கிறோம்; வடநாட்டு ஆதிக்கத்திலிருந்து கேரளமும் தமிழகமும் ஆந்திரமும் கர்நாடகமும் விடுதலை பெறுவதே நமது தலையாய நோக்கம் என்பதையே அந்தத் தோழர்கள் புரிந்து கொள்ளாமல், கேரள மந்திரி சபையைக் கவிழ்க்க வந்து விட்டவர்களைப் போல நம்மைக்கருதிக்கொண்டு வீண் பீதி கொண்டனர். அதன் விளைவாகக் கேள்விகள் வந்தன. நம்மைப்பற்றி நல்ல விளக்கத்தைக் கேரளப்பகுதி மக்களுக்கு எடுத்துரைக்க அந்தக் கேள்விகள் பயன்பட்டன. என்ன செய்வது? களையெடுக்கும்போது கரையில் குவிக்கப்பட்ட குவளை மலர்களின் இடுக்கிலே வண்டுகள் ஒளிந்துகொண்டிருந்தால் வரப்பில் நடப்பவர்களின் காலில் பட்டு நசுங்கிவிடத்தானே நேரிடுகிறது! சிலப்பதிகாரம் கூறும் வழிச் சிறப்பில் அஃதும் ஒன்றன்றோ!

கேரளத்தின் உட்பகுதிகளிலே கூட நமது முழக்கத்திற்கு ஆதரவு வளர்ந்து வருகிறது. ... சுபேர் அவர்களின் அரிய முயற்சிக்கு ஈடு இணையற்ற வெற்றி கேரளப் பகுதியிலே நமக்குக் கிடைத்து வருகிறது என்பதற்கோர் எடுத்துக்காட்டே வண்டிப்பெரியாரில் நடைபெற்ற விழாவும், தொழிலாளர் அணிவகுப்பும்! எத்துணை ஆர்வம் படைத்த தமிழர்கள்-மலையாளிகள்-தொழிலாளிகள் நமது பாசறையில் ஏறுநடை போட்டு வீண் ஏம் குவிந்துகொண்டிருக்கிறார்கள்! தாமரை நிறைந்த தடாகத்திலே புள்ளினங்கள் போர் முழக்கம் போல் ஒலி யெழுப்புகின்றன என்று இளங்கோவடிகள் சித்திரம் தீட்டுகிறாரே; அஃதேபோல் தான் முழக்கம் கேட்டோம்; அந்தப் பகுதியில்! ஆனால்... "அவரெல்லாம்—நாமெல்லாம் அடிமைகள்" என்ற நினைவு, தாமரைத் தடாகத்தைச் சேறு நிறைந்த குட்டைபோலவே காட்சியளிக்கக் கவலையுண்டாக்கியது.

இப்போது எண்ணிப் பார் பொன்முடி: நமது பயணத்திலே நமக்கிருக்கும் அலுவல்கள் எப்படிப்பட்டவை யென்று! விடுதலை முழக்கமிட ஊர் ஊராகச் சென்று, மக்களின் மாமன்றங்களைக் கூட்டி, வீரர்களைச் சேர்த்திட வேண்டிய பணி—அதே வேளை......நாட்டு மக்களின் அன்றாடப் பிரச்சினைகளைக் கவனிக்க...... நம்மைச் சட்ட மன்றத்துக்கு அனுப்பியவர்களின் தேவைகளை ஆராயத் தொகுதிகளுக்குச் சென்று ஏற்றிடும் தொண்டு...நம்மை உணராமல் ஒதுங்கியிருப்பவர்களையும் ஓரணியில் திரட்டுவதற்காக நாம் எடுத்துக்கொண்டுள்ள கலைத்துறைப் பணி—இன்னோரன்ன வேலைகளை மேற்போட்டுக் கொண்டுதான் கழகத்து வீரர்கள் ஒவ்வொருவரும் விடுதலைப் பயணத்திலே கலந்து கொண்டிருக்கின்றனர். அந்தப் பயணத்திலே பலாக் கனியை — தேன் கூட்டைச் சில இடங்களில் காணுகிறோம் எனினும் அவை நமக்கு சுவையூட்டுவதில்லை. காரணம், சோகத்தை நெஞ்சிலேந்தி வழி நடக்கும் கோவலன் கண்ணகியைப் போலவேதான் நாமும் நடக்க வேண்டியவர்களா யிருக்கிறோம். அவனோ சீரிழந்து சிறப்பிழந்து சிலம்பு விற்கப் போகிறான். நாமோ, எலும்பு ரத்தம் கொடுத்தாயினும் சுதந்திரம் வாங்கப் போகிறோம். இதுவரையில் தவறான பாதையில் சென்றோமே என்ற ஏக்கம் அவனுக்கு!

இன்னும் பலர் தவறான பாதையில் சென்று கொண்டிருக்கிறார்களே என்ற வருத்தம் நமக்கு! திராவிடர் கோவலனாக இருந்தனர்; நமது கழகம் கண்ணகியாக இருந்தது— இன்றுதான் புதுவாழ்வு காணலாம் என்ற நற்கொள்கை திராவிடருக்கு உதயமாகியிருக்கிறது!

சிலப்பதிகாரக் கோவலன் ஆரியப் படை கடந்த நெடுஞ்செழியனின் அவசரத் தீர்ப்புக்குப் பலியானான்.

கண்ணகியாம் கழகத்தின் சொல்லேற்றுப் பின்பற்றும் இந்தக் கோவலர்கள் பலியாக மாட்டார்கள்—காரணம்; இப்போதுள்ள நெடுஞ்செழியன்—நாவலர்! காவலர் மட்டுமல்ல; அதனால் வார்த்தை பிறழாது— அவசரத் தீர்ப்பு அணுகாது!

[தொடரும்]

டிசம்பர் 10-ம் தேதி கிடைக்கும்!

சத்தான கருத்துகள்—
வித்தகர் பேருரைகள் நிறைந்த
இலக்கியப் பேரிதழ்

முத்தாரம்

புலவர் குழந்தை
கே. ஏ. மதியழகன்
நாஞ்சில் கி. மனோகரன்
கவிஞர் வாணிதாசன்
ஆகியோரின் எழுத்தோவியங்கள்!
மற்றும்,

கை : சிறுகதை இலக்கிய மன்னன் மாப்பசான் தீட்டிய மர்மக் கதை—தமிழில்.

முத்தின் ஒளி : முத்துக்கு ஒளி பிறந்த விதத்தை விளக்கும் அறிவியல் கட்டுரை.

அனாதை ஆலிவர் : சார்லஸ் டிக்கன்சின் மகத்தான பெருங்கதை தமிழில் சுருக்கித் தரப்படுகிறது.

தமிழ்த் தாய் : தமிழ்க் குல மாந்தரின் தியாகப் பண்பை விளக்கும் முல்லை சத்தியின் சிறு கதை.

இத்துடன்
ஆசிரியர் மு. க. வின்
கவிதைநடைச் சிறுகதை வழக்கம்போல் உண்டு!

[அதிகப் பிரதிகள் தேவைப்படும் விற்பனையாளர்கள் 10—12—57—க்குள் தெரிவித்துவிட வேண்டுகிறோம்]

சோமநாதபுரத்துச் சிலை . . .

[5-ம் பக்கத் தொடர்ச்சி]

"கஜினி முகம்மது உண்மையிலேயே நல்லவர், சுவாமி!"

"மனப் பூர்வமாகவே நீ அப்படி நம்புகிறாயா, திலோத்தமா?"

"அதிலென்ன சந்தேகம்? கொடுத்த வாக்கைக் காப்பாற்றி தங்களை நான் பார்ப்பதற்கும் சந்தர்ப்பம் ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறாரே, அதிலிருந்தே அவருடைய தூய உள்ளம் தெரியவில்லையா?"

"கஜினி முகம்மது நல்லவர் என்று நீ நம்புவது என் வேலையை சுலபமாக்கி விட்டது!"

"கஜினி முகம்மது கிடக்கட்டும், சுவாமி! நீங்கள் எப்படி இங்கு வந்தீர்கள் என்பதை விவரமாகச் சொல்லுங்கள்...சாகுமுன் உங்களைப் பார்ப்பேனென்று நான் நம்பவேயில்லை..."

நிர்மலானந்தர் பெருமூச்சு விட்டார். "மரணம், இப்பொழுது உனக்கு இல்லை திலோத்தமா! இந்துஸ்தானத்தில் எவருக்கும் கிட்டாத பேறு உனக்குக் கிடைக்கப் போகிறது. மாபெரும் மன்னனின் மனைவியாகப் போகிறாய் நீ!"

"நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள், சுவாமி?"

"நான் தூது வந்திருக்கும் விஷயத்தைச் சொல்லுகிறேன்..."

"தூது வந்திருக்கிறீர்களா...? என்ன சுவாமி, உளறுகிறீர்கள்?" — திலோத்தமா விழித்தாள்.

"உளறவில்லை திலோத்தமா! நீ அடையப்போகும் பெருவாழ்வை எண்ணிப் பெருமிதம் கொள்ளுகிறேன்......உன் கலைத் திறன் பற்றிக் கேள்விப்பட்ட கஜினி, உன்னைத் தன் மனைவியாக்கி மரியாதை செய்ய விரும்புகிறார்......அதற்கு உன் சம்மதம் பெறும் வகையில் தான் நான் இங்கு தூதனுப்பப்பட்டிருக்கிறேன்..."

"சுவாமி...!" — நிர்மலானந்தரின் பிடியிலிருந்து விலகி, நீர் வழியும் கண்களோடு திலோத்தமா அவரை நோக்கினாள். "நீங்களா சுவாமி என்னைப் பார்த்து இத்தகைய கொடிய சொற்களைக் கொட்டுகிறீர்கள்? வாழ்க்கையில் எந்த ஒருவரிடம் என் இதயத்தின் ஆழத்திலிருந்து அன்பையெல்லாம் ஒருமுகமாகச் செலுத்தினேனோ, அவரா இந்த அர்த்தமற்ற செய்தியை என்னிடம் சொல்ல ஓடோடியும் வந்திருக்கிறார்... வெட்கம் சுவாமி; வெட்கம்... இதற்குப் பதிலாக, தூக்கிலே மாட்டித் தொங்கவிட கஜினி என்னை அழைப்பதாகச் சொல்லியிருந்தால், அன்புடனும் மகிழ்ச்சியுடனும் அந்தச் செய்தியை ஏற்றுக் கொண்டிருப்பேனே......சுவாமி! உண்மையை இந்த நெருக்கடியான சந்தர்ப்பத்தில் நான் சொல்லித் தான் தீரவேண்டும்......எத்தனையோ பேருடன் திலோத்தமா கணிகையாக வாழ்ந்தாள் என்பது உண்மை; அவர்களெல்லாம் அவளுக்குப் பொன்னும் மணியும் பூட்டி மகிழ்ந்தார்கள். ஆனால் அவள் காதலித்ததெல்லாம் ஒரே ஒருவரைத்தான்...சில நாழிகைகள் தான் அவர் அவளோடு இருந்தார். போகும்பொழுது அவளுடைய இருதயத்தைக் கொள்ளையடித்துப் போய்விட்டார்...அவரே இப்பொழுது தான் களவாடிவிட்ட இதயத்தை, மற்றொருவருக்குத் தானம் கேட்டுத் தூது வந்திருக்கிறார்...சுவாமி, இதைச் சொல்லி என் இதயத்தைப் புண்ணாக்க நீங்கள் இங்கு வந்திருக்கவே வேண்டாம்..." — திலோத்தமாவின் கண்களில் தாரை தாரையாக நீர் வழிந்தது.

நிர்மலானந்தர் எங்கோ எதையோ பொருளில்லாமல் பார்த்துக் கொண்டிருந்தார். மனப் போராட்டத்தின் சாயல் முகத்தில் தெரிந்தது.

"திலோத்தமா, பந்த பாசமற்ற ஜீவன்மீது அன்பு செலுத்துவது, சூன்யத்தில் சலனத்தை ஏற்படுத்தச் செய்யும் முயற்சியாகும். நிர்மலானந்தன் ஒரு மாய உருவம்... ஏதோ ஒரு நோக்கோடு உருவம் பெற்றான்...அவன் ஒரு கருவி — அவ்வளவுதான்! அவனுக்கென்று சொந்தமான குணம் ஏதும் இல்லை...வேண்டாத பொழுது இந்த உருவைத் துறந்து, அவன் ஜனன பூமி நோக்கிச் சென்று விடுவான்... ஆனால், கஜினி முகம்மது... அதிகாரமும் அந்தஸ்தும் பெற்ற வரலாற்றுச் சிறப்புடைய வீரன்; பல்வகை சாத்திரமும் பயின்றவன்; இலக்கிய ரசிகன்; இளகிய இதயம் படைத்தவன்; லட்சியத்தோடு வாழ்பவன்; கலைப் பைத்தியம் கொண்டவன்; வந்த இடங்களில் பிற மன்னர்களைப் போலன்றி, பொருளை மட்டுமல்லாமல், பேராசிரியர்களையும் கவிவாணர்களையும் கலைஞர்களையும் தன் தலைநகரான கஜினி நகரத்தை அலங்கரிக்க அழைத்துச் செல்லுகின்றவன்...அவன், உன்னை அரசவையை மட்டுமல்ல; அரியணையையே அலங்கரிக்க வர வேண்டுமென்று என்னைத் தூதனுப்பியிருக்கிறான்... திலோத்தமா, சோமநாதபுரத்து ஆலயத்துக்குள்ளே காமப் புரோகிதர்களின் விரச உணர்ச்சிகளைத் தூண்டப் பயன்பட்ட உன்னுடைய கலை, அரசவைக் கலைவாணர்களின் பாராட்டுதலைப் பெறப் போகிறது; மாபெரும் கவிஞர்களின் காவியங்களிலே இடம் பெறப்போகிறது...சாது நிர்மலானந்தனுக்காக..."

"போதும் சுவாமி உங்கள் உபதேசம், போதும்! சுய நலத்துக்காகவும் சுகபோக வாழ்வு கிடைக்கிறதேஎன்பதற்காகவும் இத்துப் பெண்ணை திலோத்தமா இஸ்லாமிய கஜினி முகம்மதுவை மனத்தாலும் வரிக்க மாட்டாள்... துறவி நிர்மலானந்தரின் துறவுக்கும் லௌகீக இச்சைகளால் களங்கம் ஏற்படுத்த மாட்டாள்...சுவாமி, நீங்கள் போகலாம்......உங்கள் தூது தோல்வியடைந்து விட்டதாக கஜினி முகம்மதுவிடம் தெரிவித்து விடுங்கள்...மானமுள்ள எந்த இந்துப் பெண்ணும் கஜினியின் இச்சைக்கு ஒருப்பட மாட்டாள் என்பதைத் தெளிவாக எடுத்துச் சொல்லுங்கள்...இந்து தர்ம சாஸ்திர விற்பன்னரான தாங்களே இந்த உண்மையை உணராத போது...," — திலோத்தமா மடமட வென்று வார்த்தைகளைக் கொட்டினாள்.

நிர்மலானந்தரின் முகத்தில் ஏமாற்றத்தின் சாயல் படிந்திருந்தது. "திலோத்தமா, என் தூது தோற்றுவிட்டது என்பதைக் கேட்டவுடன் கஜினி முகம்மது என்ன செய்வான் தெரியுமா? நிர்மலானந்தரின் உடலைப் பல கூறுக்கிப் பருந்துகளுக்கு இரையாக்குவான்..." என்றார் நிர்மலானந்தர்.

"துறவி நிர்மலானந்தர் உயிருக்குப் பயந்த கோழையாக இருப்பார் என்று இதுவரையில் நான் கற்பனை செய்து பார்த்ததுகூடக் கிடையாது... ஒரு இந்துப் பெண்ணின் மானத்தை இஸ்லாமியனுக்குக் காட்டிக் கொடுத்து உயிர் பிழைக்கும் அளவுக்கா மானமிழந்து விட்டீர்கள்? வேதனை சுவாமி, வேதனை! போதும் உங்கள் நாடகம்! தயவு செய்து இங்கிருந்து போய்விடுங்கள்... அன்பின் உருவாக, அறத்தின் நிறைவாக உங்களை நான் உருவகப்படுத்திப் பார்த்ததெல்லாம் வெறும் மனப்பிரமை! திலோத்தமாவின் கடைசி நம்பிக்கையும் — திருப்தியும் — கனவாகி விட்டன.........சுவாமி, கடைசியாக எனக்கு ஒரு உதவி செய்யுங்கள்...கஜினியிடம் சென்று என் மரணத்தைத் துரிதப் படுத்தச் சொல்லுங்கள்.... போங்கள்...... சீக்கிரமாகப் போங்கள்...!"

நிர்மலானந்தர் பதில் பேசவில்லை. அவருடைய உதடுகள் உணர்ச்சியால் துடித்தன. கண்களில் நீர் திரையிட்டிருந்தது.

"என்னை மன்னித்துவிடு திலோத்தமா! உன் கனவுகள் மட்டுமல்ல; என் கனவுகளும் கனவாகவே ஆகிவிட்டன...நிர்மலானந்தரின் நாடகம் முடிந்துவிட்டது. இனி அவருக்கு வேலையில்லை.........நிர்மலானந்தருக்கு கஜினியிடமிருந்து நீ விடுதலை வாங்கித் தந்தாய்......... உனக்கு கஜினியிடமிருந்து விடுதலை வாங்கித் தந்த பிறகே நிர்மலானந்தனும் அழிந்து போவான்......இது சத்தியம்!"

நிர்மலானந்தர் இதைக் கூறிய பின் ஏக்கத்தோடு திலோத்தமாவை ஒருமுறை பார்த்துவிட்டு, வேகமாக வெளியேறினார். அவர் சென்ற பின் சிறிது நேரம் வரையில் 'திக் பிரமை' பிடித்து நின்றாள். எவ்வளவு நேரம் அப்படி நின்று கொண்டிருந்தாளோ தெரியாது; மீண்டும் நடந்தவைகளை எண்ணிப் பார்த்தவுடன் 'கோ' வென்று கதறினாள்.

தூரத்தில் பாசறைகளில் விளக்குகள் பிரகாசமாக எரிந்து கொண்டிருந்தன. போர் வீரர்கள் தூங்க மனமில்லாதவர்கள் போல் ஏதோ வேலைகளில் ஈடுபட்டிருந்தார்கள். புவனாவின் நிலைமையைத் திலோத்தமா எண்ணிப் பார்த்தாள். கஜினி அவளுக்குப் புவனாவைப் பற்றிக் கொடுத்த வாக்குறுதியைக் காப்பாற்றுவானோ என்ற ஐயம் தோன்றியது. கஜினி கொடியவனாக இருந்தால் நிர்மலானந்தரை ஏன் அவளிடம் தூதனுப்ப வேண்டும்? கஜினி நல்லவனாகத்தான் இருக்க வேண்டுமென்று மீண்டும் நினைத்தாள். நிர்மலானந்தரைப்பற்றி எண்ணியபோது அவர்மீது அவளுக்கு வெறுப்புத் தோன்றியது ...நிர்மலானந்தர் கஜினியுடன் போராடி அவளுக்கு உயிர்ப் பிச்சை தந்தாலும் அவள் எதற்காக—யாருக்காக இனி வாழப் போகிறாள்...முடிந்தால் புவனாவை ஒரு முறை பார்த்துவிட்டால்...அதுதான் அவளுடைய கடைசி ஆசை...அந்த ஆசையும் கனவாகி விட்டால்...எண்ணங்கள் வளர்ந்தன......தூரத்தில் போர் வீரர்களின் நடமாட்டமும், பொருள்களை அங்குமிங்கும் எடுத்து வைப்பதால் ஏற்படும் ஓசையும் கேட்டுக் கொண்டேயிருந்தன...துயரச் சுமையையும் தாண்டி, களைப்பு திலோத்தமாவின் கண்ணிமைகளை மூடியது.

சிறிது நேரத்தில் அயர்ந்து தூங்க ஆரம்பித்தாள்.



பரலோகம் ...

[2-ம் பக்கத் தொடர்ச்சி]

ஜகத் : என்னடா உளறுகிறாய்? இன்ஷ்யூர் செய்த ரசீது எங்கேடா?

கோவிந் : வரதப்பன், காஞ்சிபுரம் என்று கூறியதால்—தாங்கள் கடவுளுக்குத்தான் காணிக்கையாக அனுப்புகிறீர்களெனக் கருதி, தங்கள் சிஷ்யர்கள் நடத்தும் யாகக் குண்டத்தில் அன்றே போட்டு விட்டேனுங்களே! இன்னும் அது கணக்கப் பிள்ளைக்குப் போய்ச் சேரவில்லை? ஒரு சமயம்; அது கஞ்சி வரதப்பன் கையில் கிடைத்ததோ என்னவோ?

[இதைக் கேட்ட கணக்கப் பிள்ளை மயங்கி ஜகத்குருவின் மடியில் விழுகிறார்!]

—"இன்பபுரியான்"

திராவிட முன்னேற்றக் கழகப்

பொதுக் குழுக் கூட்டம்

★

29-12-57 ஞாயிறு அன்று நாகர்கோயிலில் திராவிட முன்னேற்றக்கழகப் பொதுக் குழுக் கூட்டம் நடைபெறும்.

'அறிவகம்' சென்னை
2—12—57

தலைமைக் கழகம் (தி. மு. க.)

பாகிஸ்தான் இரண்டாகுமா?

பாகிஸ்தான் பகற்கனவு—என்ருர்கள்!

ஜின்னுவின் திட்டம் ஒட்டைப் படகு—என்று கேலி பேசினுர்கள்!

ஆனுலும் 1947—ம் ஆண்டு, ஆகஸ்ட் 15-ம் தேதியன்று அந்தக் கனவு நனவாயிற்று; பாகிஸ்தான் பிறந்தது!

—விடுதலை விரும்பிகள் அனைவருக்கும் அந்தச் செய்தி விருந்தாக இருந்த போதும்; நாளடைவில் பாகிஸ்தானில் கிளம்பி வரும் பிரச்சினைகள் தலைவேதனையாகத்தான் முடிந்தன!

ஜின்னு, லியாகத் அலிகான் போன்ற நல்ல தலைவர்கள் இருக்கும் வரையில் பாகிஸ்தான் முன்னேற்றப் பாதை நோக்கிப் பீடுநடை போட்டது!

ஆனுல் அவர்களுக்குப் பிறகோ பச்சைப் பதவிப் பித்தர்கள் ஆதிக்கத்தில் பச்சைக் கொடி கொண்டோரின் துரைத்தனம் சிக்கிக் கொண்டது.

அதிகாரமென்னும் மதுவினை நக்கிக் குடிப்பதற்காகச் 'சலாம்' போட்டு நிற்கும் குலாம்களின் தொகை அதிகரித்து விட்டது!

அதன் விளைவாக பாகிஸ்தான் நிர்வாகக் குழப்பத்திற்கும், யதேச்சாதிகாரத்திற்கும் ஓர் எடுத்துக் காட்டாக மாறி விட்டது!

இப்போது அந்த உள் விவகாரக் குழப்பம் மேலுமொரு உச்சகட்டத்தை அடைந்திருக்கிறது!

பாகிஸ்தான் பக்டூனிஸ்தான் என்று இரண்டாகத்தான் இனிப் பிரிய நேரும் என்று சந்தேகித்துக் கொண்டிருந்தோம்!

ஆனுல் இப்போது பாகிஸ்தான் என்கிற அமைப்பு கிழக்கு பாகிஸ்தான்; மேற்கு பாகிஸ்தான்; பக்டூனிஸ்தான்—என்று மூன்று பிரிவுகளாகப் பிரிந்து விடுமோ என்கிற ஐயப்பாடு தோன்றியிருக்கிறது.

ஏனெனில் இதுநாள்வரை கான் அப்துல் கபார்கான் போன்றவர்கள்தான் பக்டூனிஸ்தான் வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருந்தார்கள். ஆனுல் இப்போதோ கிழக்கு பாகிஸ்தான் முதலமைச்சர் கிழக்கு பாகிஸ்தான் தனியாகப் பிரிந்து போக நேரிடும்—என்று எச்சரிக்கை விடுத்திருக்கிருர்!

ஏன் அந்த நிலைமை அங்கு உருவாயிற்று?

கிழக்கு—மேற்கு பாகிஸ்தானங்களிலே இருப்பவர்களில் பெரும்பான்மை வகுப்பினர் முஸ்லிம்கள்தான்!

இருந்தாலும் அவர்கள் மேற்கு பாகிஸ்தானிலுள்ள தங்கள் சகோதரர்களிடமிருந்து ஏன் பிரிந்து செல்ல நினைக்கிருர்கள்?

அதற்கும் நிறைய காரணங்கள் இருக்கின்றன!

முதலாவதாக இரு பாகிஸ்தானுக்கும் இடையே நூற்றுக் கணக்கான மைல்கள் இடைவெளி இருக்கிறது!

அடுத்தது மொழி வேற்றுமை. மேற்கு பாகிஸ்தானிலிருப்பவர்கள் பேசுகின்ற மொழி உருது. ஆனுல் கிழக்கு பாகிஸ்தானிலோ பெரும்பான்மையோர் வங்க மொழியைத் தாய் மொழியாகக் கொண்டவர்கள்.

இவற்ருேடு இரு பகுதிகளிடையே நிலவும் பொருளாதார ஏற்றத் தாழ்வும் கிறலை அதிகப்படுத்திவிட்டன.

உதாரணமாக கிழக்கு பாகிஸ்தானிலே சணல் விவசாயம் அதிகம். ஆனுல் சணல் ஆலைகளோ போதுமான அளவு அங்கு இல்லை.

ஆலைகள் அனைத்தும் மேற்கு பாகிஸ்தானிலே குவிந்து கிடக்கின்றன.

இங்கு தென்னுட்டிற்கும் வடநாட்டிற்கும் இடையே இருந்து வரும் பேதங்களைப் போலவே அந்த இரு பாகிஸ்தானிகளிடையே இருந்து வந்த பேதங்கள் வளர்ந்து கொண்டே செல்கின்றன.

உதாரணமாக; சமீபத்தில் கீழ் பாகிஸ்தானைச் சேர்ந்த சுராவர்த்தி மேல் பாகிஸ்தானுக்குச் சென்றிருந்தபோது அங்குள்ள விஷமிகளால் கடுமையாகத் தாக்கப்பட்டிருக்கிருர்! அவருடைய கார் சேதப்படுத்தப் பட்டிருக்கிறது! அவர் மீது செருப்புகள் வீசப்பட்டிருக்கின்றன!

—இந்த அவமானப் படலத்திற்குப் பிறகுதான் கீழ் பாகிஸ்தான் என்ருவது ஒரு நாள் பிரிந்துவிடும் என்கிற அபாய அறிவிப்பும் வந்திருக்கிறது!

—ஆக ஒரு நாடு மேலும் பல நாடுகளாகப் பிரியாமல் இருப்பதற்கு மதம் மட்டும் ஒன்றுபடுத்தி வைக்கும் சக்தியாக இருக்க முடியாது—என்பதற்கு சமீபத்திய எடுத்துக் காட்டு தான் அந்த அபாய அறிவிப்பு!

கீழ் பாகிஸ்தானுக்கும் மத்திய அரசாங்கத்திற்கும் இடையே இருக்கும் தூரம் மத்திய அரசாங்கத்தை ஒரு அன்னிய அரசாங்கமாகக் காட்டுகிறது அங்கே!

அதே போலத்தான் இங்கும்!

மத்திய அரசாங்கத்தின் தலைநகராகவும்; பார்ளுமென்றம் இருக்குமிடமாகவும் விளங்கும் டில்லி மாநகரத்திற்கும்; தென்கோடியிலிருக்கும் கன்யாகுமரிக்கும் உள்ள தூரம் கீழ் பாகிஸ்தானுக்கும் மேல் பாகிஸ்தானுக்கும் உள்ள தூரத்தைவிட அதிகமானது! அதனுல்தான் முன்பு ஒரு முறை ஆச்சாரியார் கூட 'தூரத்திலிருக்கும் டெல்லி' என்று குறிப்பிட்டிருக்கிருர்!

அங்கே உருதுமொழி—வங்க மொழிக்கிடையே பேதம்!

[தொடர்ச்சி பக்கம்—10]

யானைப் பசிக்கு சோளப் பொறியா?

அமெரிக்கா பெரிய அளவில் கடன் தராதென்றும் 150 மில்லியன் டாலர்தான் தருமென்றும் செய்தி கூறுகிறது.

(படம்: 'சங்கர்ஸ் வீக்லி')

இங்கே இந்திமொழி—இந்தி அல்லாத திராவிட மொழிக் கிடையே பேதம்!

பொருளாதார ஏற்றத்தாழ்வி லும் நிலைமை அப்படித்தான்! மாபெரும் ஆலைகளும் அணைக் கட்டுத் திட்டங்களும் மருந்துக் குக்கூட இங்கு இல்லை!

—இங்கே நாம் பிரிவினையைக் கேட்கிறபோது கீழ் பாகிஸ் தான் பிரிவினை கேட்பதில் என்ன தவறு இருக்க முடியும்?

நல்லவேளை; சுராவர்த்திக்கு மேல் பாகிஸ்தானிலே நடந்த 'மரியாதை'யைப்போல திருவா ளர்கள் காமராசருக்கோ அல் லது சுப்ரமணியத்துக்கோ டில் லியிலே நடக்கவில்லை என்ப தைத் தவிர 'நமக்கும் அவர் களுக்கும்' உள்ள பிரச்சினை ஏறத்தாழ ஒன்றுதான்!

—ஆனால் இவற்றையெல்லாம் திரையிட்டு மறைக்கும் விதத் திலே முன்னாள் சென்னை கவர் னர் பிரகாசா அவர்கள் கீழ்க் கண்டவாறு குறிப்பிட்டிருக் கிறார்:

"இந்திய தேசப் படத்தைச் சுவற்றிலே தொங்க விட்டுப் பார்த்தால் உயரே இருக்கும் வடநாடு கீழே இருக்கும் தென்னாட்டை அமுக்குவது போலத்தான் இருக்கும். ஆனால் படத்தைத் தரையிலே வைத்துப் பாருங்கள்; அந்த பேதம் இருக்காது."

—பண்டிதர் அடிக்கடி குறிப் பிடுவாரே 'நான்சென்ஸ்' 'சிறு பிள்ளைத்தனம்' என்றெல்லாம்; அதற்குத் தக்கதோர் எடுத்துக் காட்டுபோல் இருக்கிறது கனம் பிரகாசாவின் பேச்சு!

தேசப் படத்திலே மேலும் கீழுமாக இருப்பதால்தான் வட நாடு தென்னாட்டை அமுக்கி வைப்பதுபோல — ஆதிக்கம் செலுத்துவதுபோல— தெரிகிற தாம் நமக்கு!

அய்யா; பிரகாசாஜி! பாகிஸ் தான் படத்தைப் பாருங்கள்— அதன் மேற்குப் பகுதியும் கிழக் குப் பகுதியும் மேலும் கீழுமா வாக இருக்கின்றன? இல்லையே! சுவற்றிலே தொங்க விட்டாலும் தரையிலே வைத்தாலும் ஒன்று கத்தானே இருக்கிறது! அப்படி இருந்தும் மேல் பாகிஸ்தான் கீழ் பாகிஸ்தானை அமுக்குவ தாக எப்படி ஒரு உணர்ச்சி அங்கே பொங்கி எழுந்திருக் கிறது?

—பாவம்; திரையிட்டு மறைப் பவர்கள் இப்படியெல்லாம் மக் கள் சக்தி கேள்விக் கணைகளை எழுப்பும் என்று எதிர்பார்க்கா மல் உளறுகிறார்கள். அவர் களுக்காகப் பரிதாபப்படு வதைத் தவிர வேறென்ன செய்ய முடியும் நாம்?

வாழ்வை...

[4-ம் பக்கத் தொடர்ச்சி]

வடநாட்டிலேயே குவிக்கப் படுகின்றன; தொழில் முன் னேற்றத் துறையில் தென் னாட்டு மாநிலங்கள்; குறிப்பா கத் தமிழ் நாடு மிகவும் புறக் கணிக்கப்படுகின்றன. இதன் விளைவு, வேலையில்லாத் திண் டாட்டமும், பற்றாக்குறை வேலைக் கஷ்டங்களும் நமது மாகாணத்தில் அதிகமாக வளர்ந்திருக்கின்றன" என்று தெள்ளத் தெளிய—திட்டவட்ட மாக குடந்தை இராம விலாஸ் குழுவின் விழா ஒன்றில் வெளி யிட்டுள்ளார். இன்றைய நிலை யில் தென்னகம் தேய்கிறது என்பதை மறுப்பாரில்லை.

இதுபோலவே மைசூர் முன் னாள் முதல்வர் திரு. அனுமந் தையா அவர்கள் அண்மையில் பங்களூரில் நடைபெற்ற கூட் டம் ஒன்றில், "இந்தி அரசாங்க மொழியாக ஏற்றுக் கொள் ளப்பட்டால், தென்னாட்டி லுள்ளவர்கள்மீது வடநாட்டி னர் என்றென்றும் ஆதிக்கம் செலுத்துவார்கள்"

என்று பேசியுள்ளார்கள். 'வட நாட்டினர் என்றென்றும் ஆதிக் கம் செலுத்துவார்கள்' என்று பேசியதன் மூலம் தற்பொழு தும் தென்னாடு வடநாட்டுக்கு அடிபணிந்தே வருகிறது என் பதை ஒப்புக் கொள்கிறார் என்று பொருள். "கன்னடம் கை கொடுக்கிறதா?" என்று கேட்கும் 'அகில இந்தியாக் களுக்கு' இதை அர்ப்பணமாக்கு கிறோம்.

இவை போல நூற்றுக் கணக் கான காரணங்களைக் காட்டித் தான் கேட்கிறோம், நாட்டைப் பிரித்துக் கொடுங்கள் என்று. இந் நிலை மாறி தென்னகம் நன் னிலை அடைய ஒரே வழி பிரி வினைதான்.

திராவிடத்தைத் தனி நாடாய் ஆக்கல் வேண்டும். திரா விடர் நாம் சுதந்திரமாய் வாழ் தல் வேண்டும்! அதற்குள்ள நெஞ்சுறுதியும், நேர்மைத் திற மும்தான் நமக்கு வேண்டும்!

—நாஞ்சில் **செ. அன்பெழில்**

கொடுமைகள் ஏன்?

"யுத்த காலத்தில் கொடுமைகள் நடந்தால்கூட மன்னிக் கக் கூடியது; ஆனால், சமாதான காலத்திலும் சொத்துக்கள் சூறையாடப்படுகின்றன—மக்கள் தொல்லைக்காளாகிறார்கள். கொடுமை தாண்டவமாடுகிறது என்றால்—சமாதான காலத் தில்கூட செஞ்சிலுவைச் சங்கம் வந்து பணியாற்றக்கூடிய நிலை ஏற்படுகிறது என்றால், அதன் பொருள் என்ன?

"சமாதான காலத்தில் கொடுமைகள் ஏன் நடக்கின் றன?—'மக்கள் நன்றாக வாழவில்லை' என்றுதான் அதற்குப் பொருள்; ஏன் நன்றாக வாழவில்லை?—'நம்மை நன்றாக வாழ வைக்கவில்லை' என்று பொருள்; வாழ வைக்காதவர்கள் யார்?—யாரிடத்தில் வாழ வைக்கும் அந்தப் பொறுப்பை ஒப் படைத்திருக்கிறோமோ அவர்கள் வாழ வைக்கவில்லை. அதற் குக் காரணம் என்ன?—யாரிடத்திலே பாதுகாப்பு கிடைக்கும் என்ற தெளிவு ஏற்படுத்தப்படவில்லை.

"குரோத உணர்ச்சிகளை நீங்கச் செய்ய, சிற்சில வேளை களில் மனிதர்களுக்கு தேவநாம போதனைகள் செய்வது மட் டும் போதாது. அதனால் மனிதனின் உள்ளத்திலே எழும் மிருக உணர்ச்சி போகாது. ஆகவே, செஞ்சிலுவைச் சங்கம், உடலிலே ஏற்படும் தழும்பை மட்டும் ஆற்ற உதவுவதோ டன்றி, உள்ளத்திலே ஏற்படும் தழும்பை—புண்ணைப் போக்க முயல வேண்டும்."

—அறிஞர் அண்ணா

பிறைவானம் ....

[11-ம் பக்கத் தொடர்ச்சி]

தனியாகக் கேட்டது.

"தேவி! இதோ பாரம்மா, திருவண்ணாமலை தீபத்தை! நீயும் சொல்லும்மா......ம்......... 'அண்ணாமலைக்கு அரோகரா! சொல்லும்மா!' என்றார் அவர்.

தேவி அவர் சொன்னபடி கத் தவில்லை!

"அன்னையும் பிதாவுமே முன் னறி தெய்வம்" என்று அது பள்ளியிலே படித்திருந்ததின் பலனா? அல்லது அப்பழுக்கற்ற அதன் நெஞ்சிலே நாம் முன்பு கேட்ட அந்தக் கேள்வி—'ஏன் இந்த தீபம்?' என்ற கேள்வி எழும்பி விட்டதா? பதிலாக 'பகுத்தறிவு'ம் தலைகாட்டி விட் டதா?

"சொல்லும்மா! இல்லாட்டி 'ஸ்கூலு'க்கு காரிலே கொண்டு போய் விடமாட்டேன், ஆமா!" என்று சொல்லிக் கொண்டே அவர் திரும்பினார்.

தேவி அங்கு இல்லை!

"எங்கே என் கண்ணு? ஐயோ, எங்கேம்மா போனே? தேவி...!" என்ற அவரது கூக் குரலுக்கு யாருமே பதில் தர வில்லை. பக்தி போதையில் பச் சிளம் குழந்தையைத் தவற விட்டு விட்ட அவரது குடும்பத் தினரால்கூட விக்கி விக்கி அழத் தான் முடிந்தது. மற்ற பக்த கோடிகளுக்கு என்ன அக்கறை? அவர்கள் நெஞ்சிலிருந்து அண்ணாமலையானை அகற்ற முடி யுமா? அப்படி அகற்ற ஒவ்வொ ருவருக்கும் இப்படி ஒரு சம்பவம் அல்லவா ஏற்படவேண்டும்?

"தேவி! தேவி! உடம்பெல் லாம் நகை போட்டிருந்தாயே, அம்மா!"

அவர் ஓடினார். பக்தகோடிக ளிடையே இடிபட்டு, அடிபட்டு, பாறைக் கற்கள் செருப்பில்லா பாதத்தைத் துன்புறுத்து வதையும் கவனியாது "ஐயோ, தேவி!" என்று அலறிக் கொண்டே அடிவாரத்தை நோக்கித் தலைதெறிக்க ஓடிக் கொண்டிருந்தார்.

அவர் நிலை உண்மையிலேயே பரிதாபகரமாகத்தான் இருந் தது. பெற்ற பாசம் அவரைக் கண நேரத்தில் பைத்தியமா க்வே மாற்றிவிட்டது.

ஆனால் அந்தப் 'பைத்தியம்' மீண்டும் பாழும் சொரூபம் எடுக்கும் என்று நாம் கண் டோமா? அதன் காரணமாக பயங்கர நிகழ்ச்சி ஒன்று நடை பெற இருக்கிறது என்பதைத் தான் அறிந்தோமா?

ஓடிவரும் வேகத்தில் உருளும் பாறைக் கற்களுடன் போட்டி போட்டுக் கொண்டு பறந்து வந்த அவரது பார்வை ஓரிடத் தில் 'சடக்'கென்று நிலைகுத்தி நின்று விட்டது!

அங்கே தேவியைக் கண்டு விட்டார்!

"கண்ணே தேவி!" என்று அலறத் திறந்தது அவர் வாய்!

ஆனால் கணநேரத்தில் பெற்ற பாசத்தையும் மீறி 'பண மோகம்' தலை தூக்கிவிட்டது!

அவர் அலறவில்லை—

காரணம், தேவியின் உட லிலே நகை ஒன்றுகூட இல்லை!

காதிலே கிடந்த ஜிமிக்கி— வைர மூக்குத்தி — கல் பதித்த கை வளையல்கள் — கழுத்திலே கிடந்த முத்துச் சரம்—விரல் களை அலங்கரித்த மோதிரங்கள் —'முலாம்' பூசப்படாத அசல் தங்க ஒட்டியாணம் — வைரக் கொலுசுகள்—எங்கே? அத்த னையும் எங்கே? பட்டமரம் போல் நிற்கும் தேவியைக் காணவா அவர் ஓடி வந்தார்?

"ஐயோ!" என்று அலறத் துவங்கினார் அவர்; அது "படு பாவி!" என்று முடிந்தது.

தேவிக்குப் பக்கத்திலே பயந்த நிலையில் நின்று கொண்டிருந் தான் அந்தப் 'படுபாவி' என்ற பட்டத்துக்கு உரிய ஏழைத் தம்பி அண்ணாமலை!

அவன் நெற்றியிலிருந்து வழிந்து, காய்ந்து, உலர்ந்து போயிருந்த இரத்தத்தைக்கூட அவர் கவனிக்கவில்லை!

"அடப் பாவி! திருட்டுக் கழுதை!..." என்று கர்ஜித்தார்.

அவன் நடுநடுங்கிப் போனான். படமெடுத்தாடும் பாம்பைப் போல்—பாய்ந்து வரும் வேங்கை போல்—சூலம் பெற்ற 'பத்ர காளி'போல்—அவர் தோன்றி னார் அவன் கண்களுக்கு!

அவரது கண்கள் கொள்ளிக் கட்டைபோல் — அண்ணாமலைத் தீபம் போல்—இரத்தச் சிவப் பாகக் காணப்பட்டது.

அவன் உடல் அவனையும் மீறி 'வெட வெட' என்று நடுங்கிக் கொண்டிருந்தது.

"திருட்டு நாயே! எங்கே நகைகள்?" என்று உறுமிக் கொண்டே அவனது அடி வயிற் றில் பலம் கொண்ட மட்டும் முரட்டுப் பாதங்களால் எட்டி உதைத்தார்.

அவன் 'தடா' லென்று கீழே சாய்ந்தான். உருண்டான். உருண்டு கொண்டே போனான்.

அவர் அவனைத் தடுத்து நிறுத்த ஓடினார்!

மலைப்பாறைகளில், மோதி மோதி பந்துப்போல் வேக மாக உருண்டு கொண்டே செங் குத்தான பகுதி நோக்கி ஓடிய அந்தச் சிறு உடலை அவரால் பிடிக்கவே முடியவில்லை.

என்ன ஆகப்போகிறதோ?

அதே சமயம், "ஐயோ" என்ற மரண அலறலோடு மலைச்சரிவுப் பள்ளம் ஒன்றில் அண்ணாமலை விழுந்து மறைந்தான்!

"அப்பா!" என்ற கதறலோடு தன் கண்களை மூடிக்கொண் டது தேவி!

அப்போது அதன் கையிலி ருந்து கீழே ஏதோ விழுந்தது!

"என்னம்மா அது?" என்றார் அவர்.

"நகைகள்!..."

"ஆங்...!"

"அந்த அண்ணாதானப்பா எல்லாத்தையும் கழற்றிக் கொடுத்தது! நான் உன்னைக் காணும அழுதேன். அப்போ யாராவது திருடன் கண்டா பிடுங்கிக்குவான்—வாம்மா, உங் கப்பாவைக் கண்டு புடிப் போம்னு சொல்லி நகைககளை 'கர்ச்சிப்'புலே கட்டி கையிலே பத்திரமாவச்சிக்கச் சொல்லிச்சு ...உன்னைத்தேடித்தான் வந்துக் கிட்டிருந்தோம் நாங்க!...அதுக் குள்ள...!"—தேவி இப்படி மழலை பேசிற்று.

●

மறு வருடம் முதல் அவர் திருவண்ணாமலைக்குப் போவ தில்லை — தீபத்தைப் பார்ப்ப தில்லை — 'அண்ணாமலைக்கு அரோகரா' போடுவதும் இல்லை!

காரணம், அங்கே ஏழை அண்ணாமலையின் ஆவி அவ ரைத் தேடிச் சுற்றிக் கொண் டிக்கும் என்று அவர் இப் போது பயந்து கொண்டிருக் கிறார்!

—சொர்ணம்

அண்ணாமலை தீபம்

★ பிறைவானம் ★

சூதால்—சூழ்ச்சியால்—வஞ்சகத்தால் — இச்சகத்தால் இருண்டு கிடக்கும் உள்ளத்திற்குத்தான் அறிவுத் தீபம் தேவை!

அதுபோல் இருண்டு கிடக்கும் இடத்திற்குத்தான் சுடர் விடும் ஒளி தேவை!

ஆனால் அந்தத் தீபத்தைப் பாருங்களேன்! அதோ, மலை முகட்டில் — வான் முட்ட— கொழுந்து விட்டு — கிளை பல காட்டி—அக்கினிப் பிழம்பாய்த் தோன்றுகிறதே, அந்தத் தீபம் ஏன்? எந்த இருளுக்கு அது ஒளி தருகிறது?

ஒரு கவளம் உணவுக்கு—ஏன்; ஒரே ஒரு பருக்கைக்கு நாயுடன் போராடுகிறான், நடுத் தெருவிலே குடியிருக்கும் நம் நாட்டின் 'நாளைய மன்னன்' —ஆனால் நெய்யும், வெண்ணையும் நீராகப் பொழிகிறது, அந்த இரும்புச் சட்டியிலே!

உடையின்றி — அடைபட்ட கண்ணீர் ஆறெனப் பெருக— 'ஆண்டவனின்' முன்னால் நடை பயிலுகிறார்கள் ஆயிரக் கணக்கான தம்பி தங்கைகள்—ஆனால் புதுத் துணிகள் கட்டுக் கட்டாக வீசி யெறியப்படுகின்றன, தீக் குண்டத்தில்!

இப்படி உருவாகும் அந்தப் பெரும் தீ எந்த இருளை அகற்றிக் கொண்டிருக்கிறது?

அதோ, எறும்புக் கூட்டம் போல் சாரை சாரையாய்—இடிபட்டு; வதைபட்டு—கால் கடுக்க மலை உச்சிக்கு நடந்து கொண்டிருக்கிறார்களே எண்ணற்ற பக்த கோடிகள், அவர்களில்தான் யாரையாவது கேட்போமே—அந்த ஒளி எந்த இருளை விரட்ட என்று!

விடை கிடைக்காது! தீயுக்கு அப்பால் மேலே மேலே பரவிக் கொண்டிருக்கிறதே புகை மண்டலம்; அதைப்போலத்தான்—கண்ணுக்குத் தெரியாத காட்சி போல்—கருத்துக்குப் புரியாது அதற்கான விடை!

பக்தி போதை அவர்களது விழிகளை மட்டுமல்ல; அறிவையே மூடி விட்டதே!

"அண்ணாமலைக்கு அரோகரா!"

"அண்ணாமலைக்கு அரோகரா!"

திருவண்ணாமலையின் மலைகளில் மோதிய அந்தக் கூக்குரல் ஊரெங்கும் எதிரொலித்தது—ரீங்காரம் செய்தது!

அறிவை அடகு வைத்து விட்டார்களா — அல்லது சிந்திக்க மறந்துவிட்டார்களா—என்ற சந்தேகத்தைத் தோற்றுவிக்கும் அந்த ஆயிரக் கணக்கான பக்தகோடிகளில் நமக்கு மிகமிக நெருங்கியவர் ஒருவர் இருக்கிறார். வீட்டிலே நோயோடு போராடும் பிள்ளை—தவழ்ந்து விளையாடும் தங்கக் குழந்தை — அவர்களை எல்லாம் மறந்துவிட்டு 'அண்ணாமலைக்கு அரோகரா' போட வந்துவிட்டார், அவர்! வருகின்ற தேர்தலிலாவது நின்றுவிட வேண்டுமென்று அவருக்குப் பொல்லாத ஆசை — அதற்கும் 'வேண்டுதலை'யாக இருக்கட்டுமே என்றுதான் அவர் சென்னையிலிருந்து பல மைல்கள் கடந்து வந்திருக்கிறார்!

புதிதாக வாங்கிய காரின் சக்கரங்கள் திருவண்ணாமலை மண்ணிலே பட்டவுடனேயே 'அண்ணாமலைக்கு அரோகரா!' என்று அவரது வாய் தானாகவே குரல் எழுப்பியது!

மலையுச்சியிலே தீக் குண்டம்—

வழியெல்லாம் பக்தர் படை—

இவை மட்டுமா? வழியிலே இன்னொரு பெரும் படையையும் அல்லவா அவர் சந்தித்தாக வேண்டியிருக்கிறது!

"ஐயா, இரண்டு கண்களும் இல்லாத ஏழை ஐயா!"—அண்ணாமலைத் தீபத்தைக் காண முடியாத குருட்டு ஜீவன்கள்—

"காலில்லை; கையில்லை; கருணையில்லையா எசமானே?"—ஆண்டவனைக் கரம் கூப்பித் தொழ வழியில்லாத ஏழை முடவர்கள்—

இன்னும் பல வழிகளிலே பயனற்றுவிட்டவர்கள் — வாழ வழியற்றுவிட்டவர்கள் — ஆனாலும் 'வாழத்தான் வேண்டும்' என்ற வைராக்கியமும் பெற்றுவிட்டவர்கள் — பக்தர்களுடன் போட்டியிட்டுக் கொண்டு பாதை வழியே உருண்டு கிடந்தார்கள்!

காரை விட்டு இறங்கினார், அந்தப் பெரியவர். உடன் குடும்பமும் இறங்கியது. கடைசியில் தட்டுத் தடுமாறி இறங்கியது அவரது அன்புக் குழந்தை.

"தேவி! ஜாக்கிரதையா பின்னாலேயே வாம்மா...!" — குழந்தையின் உடலிலே பெட்டியிலிருந்த நகைகள் அத்தனையும் இருந்தன. தீபவொளியிலே அவை 'பள பள' வென பிரகாசித்தன. ஆகவேதான் 'அங்கே' அதிக கவனத்தைச் செலுத்தினாரோ, அவர்!

அவர் நடந்து கொண்டிருந்தார் மலையடிவாரத்தை நோக்கி!

தடையின்றி செல்ல முடியுமா, என்ன? குறுக்கே வந்து விழுந்தான், குழிவிழுந்த கண்களைத் திறக்க முடியாமல் திறந்து கொண்டு ஒரு ஏழைத் தம்பி!

"யாரடா நீ?"-அவர் சீறினார்.

"ஏழைங்க!..."

"அது தெரியுது...!"

"பின்னே பேரா?...அண்ணாமலைங்க!..."

"என்ன?"

"தெரியலிங்களா ஐயா, இதோ மக்கள் போடுற 'அரோகரா' ஆண்டவனுக்கு இல்லை ஐயா; என்னைப் போன்ற 'அனாதை அண்ணாமலை'களுக்குத் தானுங்க!..."

"சீ, சீ! அந்த 'சிரேஷ்ட'மான பெயரை இந்த 'அபிஷ்ட'த்துக்கு வைத்திருக்கிறான்களே! ...விடு வழியை!..."

"இந்த அண்ணாமலையின் குரலைக் கேட்காமல் அந்த அண்ணாமலைக்குக் குரல் எழுப்பலாமுங்களா? உங்கள் தொண்டை அடைபட்டுப் போகுமே! அவன் காதுகளும் மூடிக் கொண்டு விடுமே!" — பைத்தியக்காரன், சமூகத்தின் சாக்கடைவாசியான அவன்—வெறுத்து ஒதுக்கித் தூக்கி எறியப்பட்டுவிட்ட கழிசடைப் பிறவி—அவன் பேசலாமா வேடிக்கையாக? வேடிக்கை; விநோதம் — குதூகலம்; கொண்டாட்டம் — இவைகள் அவன் நெஞ்சாலும் நினைத்துப் பார்க்க முடியாதவைகளாயிற்றே! அவனது கிண்டல் கோபத்திற்கு அஸ்திவாரமல்லவா என்பதை உணராமல் போனான், பாவம்!

"என்னடா கிண்டல்? இப்படி குறுக்கே நின்று பேச்சுக் கொடுத்து கிடைத்ததைக் கொள்ளையடித்துக் கொண்டு போக உத்தேசமோ?..."

திருவண்ணாமலைக்குப் புறப்படும்போதே பக்கத்து வீட்டு 'ஐயர்' அறிவுரை சொல்லி அனுப்பியிருக்கிறார், அவருக்கு!

"என்ன முதலியார்வாள்! திருவண்ணாமலையானின் தீப தரிசனத்துக்குப் போறது பெரிதில்லைங்காணும்! கொழந்தையோ நகை நட்டு போட்டுண்டிருக்கா-ஜாக்கிரதையா இரும்! அகப்பட்டதைச் சுருட்ட ஆயிரம் பேர் காத்திண்டிருப்பா அங்கே!"

ஆண்டவன் சன்னிதானத்தின் 'பெருமை'யை இப்படி வர்ணித்தது அவரது நினைவுக்கு வந்துவிட்டது. அண்ணாமலை—அந்த ஏழைத் தம்பி— அந்த ரகத்தில் ஒருவன்தான் என்ற சந்தேகம் தோன்றிவிட்டது அவருக்கு! சந்தேகம் பயங்கரமான விளைவுகளின் இருப்பிடமல்லவா? அவர் தேவியை ஒரு முறை கண்காணித்துக் கொண்டார்.

"ஏய், நாயே! பேர் அப்பால்! இல்லை; நான் சும்மா இருக்க மாட்டேன்!..." என்று கத்திக் கொண்டே அந்த ஏழைச் சிறுவனை எட்டி உதைத்தார்! அண்ணாமலை 'ஐயோ' என்று அலறிக் கொண்டே தூரப் போய் விழுந்தான். மலைப்பாறை மண்டையிலே மோதிற்று! இரத்தம் பெருக்கெடுத்தது!

அந்தச் செந்நிறக் குருதி அவரது நெஞ்சைத் தொடவில்லை; வானைத் தொட முயன்று கொண்டிருந்த செந்நிறத் தீயைப் பார்த்தார்! "அண்ணாமலைக்கு அரோகரா!" என்று அலறினார்; நடந்தார்.

"ஐயோ! ஐயோ!" என்ற ஏழை அண்ணாமலையின் அழுகுரல் அவரை மட்டுமல்ல; எவரையுமே தடுக்கவில்லை; தடுத்து நிறுத்தவில்லை; நிறுத்தி உதவிடச் செய்யவில்லை!

அண்ணாமலை நாதியற்றவனாகக் கிடந்தான். அவன் நிலை கண்டு இரங்க யாருமே இல்லை என்கிறபோது என்ன செய்ய முடியும் அவனால்?

தலையில் வழிந்து கொண்டிருந்த இரத்தத்தை அழுக்கடைந்த சட்டையால் துடைத்தான். தள்ளாடித் தடுமாறி எழுந்தான். ஏன்? மறுபடியும் அத்தகைய 'புண்ணியவான்' யாருடைய பாதையிலேயாவது குறுக்கிடவா? ஆனால், இப்போது அவன், இருந்த கொஞ்ச நஞ்ச வலுவையும் இழந்து விட்டிருந்தான். அவனால் முடிந்த ஒரே செயலாம்—பேசக் கூட இப்போது முடியாது போலிருந்தது!

"அண்ணாமலைக்கு அரோகரா!"

தான் வீசிய துணிகள்—ஊற்றிய நெய்தான் ஜோதிமயமாகப் பிரகாசிப்பதாக எண்ணிக் கொண்ட நம்முடைய பக்திமான் மலையுச்சியில் நின்று கொண்டு பக்திப் பிரவாகத்தால் கதறினார். அவரது குரல் அந்த பயங்கரக் கூப்பாடுகளிடையே

[தொடர்ச்சி பக்கம்—10]



எழுத்தாணி

வே. ப. சிருமன்; சத்திரக்குடி

(?) ரஷ்யக் கம்யூனிஸ்டுகளுக்கும் இந்தியக் கம்யூனிஸ்டுகளுக்கும் உள்ள வித்யாசம் என்ன?

ரஷ்யக் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் குருஷேவ் தனக்குக் கடவுள் நம்பிக்கை கிடையாது என்கிறார். இங்குள்ளவர்களோ கையிலே கதிர் அரிவாள் கொடியுடன் கோவிலுக்குக் கரகம் எடுக்கிறார்கள்!

எம். கே. பி. கருணாகரன்;
சூளைமேடு, சென்னை—24

(?) பண்டித நேரு என் இப்போது சென்னைக்கு வருகிறார்?

முதுகுளத்தூர் ஜாதிச் சண்டையிலே விழுந்த பிணங்கள் அனைத்தும் புதைக்கப்பட்டு விட்டன; முத்துராமலிங்கத் தேவர் காவலில் வைக்கப்பட்டிருக்கிறார்; ஆயிரக் கணக்கான திராவிடக் கழகத் தோழர்கள் சிறையிலே இருக்கிறார்கள் — அதனால்தான் அமைதியாக குழந்தைகளின் சினிமாக் கொட்டகையைத் திறந்து வைப்பதற்காகப் பண்டிதர் சென்னை வருகிறார்!

டி. டி. வி. முத்துகிருட்டிணன்;
பண்ணைக்காடு

(?) நாட்டிலே உருவாகிவரும் உணவுப் பஞ்சத்தைக் குறைப்பதற்கு அரசாங்கம் என்ன செய்யப் போகிறது?

கர்ப்பத்தடை செய்து கொண்டு ஜனத் தொகையைக் குறையுங்கள் என்கிறார் பிரதமர் நேரு. "மீன் அதிகமாகச் சாப்பிட்டு உணவு தானியங்களை மீதப்படுத்துங்கள் என்கிறது காரியக் கமிட்டி! — இதை விடப் பெரிய திட்டம் வேறென்ன வேண்டும்?

எஸ். எஸ். டி. ரஹ்மான்;
மேலகற்கண்டார்கோட்டை

(?) தி. மு. கழகம் எதிரிகளை விரும்புகிறதா?

எதிரிகளால்தான் சுலபத்தில் குறைகளைச் சுட்டிக் காட்ட முடியும் என்கிற முறையில் ஒவ்வொரு ஜனநாயக அமைப்பும் எதிரிகளை விரும்புகிறது. தனிப்பட்டவர்களுக்குக் கூட இது பொருந்திவரும்.

கே. டி. எம். பாலசுந்தரம்;
சிக்பேட்—பெங்களூர்

(?) கேரளத்திலிருந்து தவளைகளை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்தால் இங்கு தவளைப் பஞ்சம் ஏற்படாதா?

ஏற்படாது. ஏனெனில் தவளைகளுக்குப் பதில் காங்கிரஸ் கட்சியில் பெண் எம். எல். ஏ.க்கள் 'சிலர்' இருக்கிறார்களே!

ஜி. இலக்குமணன்;
தாராவி—பம்பாய்

(?) இராமசாமிப் படையாச்சி யார் என்ன செய்து கொண்டிருக்கிறார்?

தடுக்கி விழுந்து தலையை உடைத்துக் கொண்டு அவர் மற்றவர்களுக்கெல்லாம் ஒரு உதாரணமாகி விட்டார்.

பி. டபிள்யூ. பெர்னாண்டஸ்
விநயநகர்—புதுடெல்லி

(?) இந்தியாவில் அமைதியான ஆட்சி நடைபெறுகிறதா?

வடநாட்டில் சமீபத்தில் ஏற்பட்ட ரயில் விபத்திற்குக் கொள்ளைக்காரர்களின் சதி என்று காரணம் காட்டப்படுகிறது.

ரயிலைக் கவிழ்த்துக் கொள்ளையடிக்கிற அளவுக்குத் திருடர்கள் பெருகியிருக்கும் நாட்டிலே எப்படித் தோழரே அமைதியான ஆட்சி நடைபெறுவதாகக் கூறமுடியும்?

எஸ். டி. அகமது உசேன்;
அழகரடி—மதுரை

(?) ஓய் எழுத்தாணியாரே! குதிரை; கழுதை—இவற்றுள் உமக்கு எது பிடிக்கும்?

கீழே தள்ளி குழி பறிக்கும் குதிரையைவிட; பத்திரமாகச் சுமந்து செல்லும் கழுதையே மேலானது, நண்பரே!

இரா. தாண்டவன்;
கல்லுக்கட்டி—காரைக்குடி

(?) கவர்னராவதற்கு என்னென்ன தகுதிகள் வேண்டும்?

பொதுத் தேர்தலில் குறைந்தது ஒரு முறையாவது தோற்றிருக்க வேண்டும்; அடுத்து, நீட்டிய இடத்தில் கையெழுத்துப் போடவாவது தெரிந்திருக்க வேண்டும்!

டி. கே. அருணகிரி;
சிங்கபெருமாள்கோயில்

(?) திருமணம் என்றால் என்ன?

அதுவா? 'ஒருவனுடைய ஒரு பாதிச் சோற்றைச் சமையல் செய்வதற்காக மறு பாதிச் சோற்றை ஒருத்திக்குக் கொடுக்கும் ஒப்பந்தம்தான் திருமணம்' என்று ஒரு அறிஞர் கூறியிருக்கிறார்!

கே. எஸ். எஸ். ராசன்;
கூறைநாடு—மாயவரம்

(?) காமராசரது சிறந்த பண்பு எது?

மௌனம்; அதைப்போல தன் குறைகளை மறைக்கும் மாமருந்து என்ன இருக்கிறது உலகத்தில்?

கே. மாசிலாமணி;
தேனாம்பேட்டை—சென்னை

(?) எதற்குமே அஞ்சாமல் வாழ்ந்துவிட முடியுமா?

முடியாது—'மனச்சாட்சி' என்ற நீதிபதியின் தண்டனையிலிருந்து யாரும் தப்புவது சுலபமல்ல; ஆனால் முதலில் அதே மனச்சான்று உற்ற நண்பராக இருந்து எச்சரிக்கை செய்வது உண்டு.

திரு. சேது மாதவன்;
புஞ்சை புளியம்பட்டி

(?) பொருளீட்டுவதற்கு சிலர் எவ்வளவோ சிரமப்படுகிறார்களே...?

நிறுத்துங்கள்—ஈட்டிய பொருளைக் காப்பாற்றுவதிலே எவ்வளவு சிரமங்கள் இருக்கின்றன என்பதை உணராதவர்கள், அவர்கள்!

சாமிவேலன்; ராயப்பேட்டை

(?) 'போய்'யுக்கு ஆயுள் என்ன?

அது இரத்தக் கொதிப்புள்ள நோயாளிக்குச் சமமானது—காலம் கணக்கிட முடியாது; ஒவ்வொரு கணமும் ஆபத்தான நேரம்தான்!

சண்முகசுந்தரம்;
அம்மாப்பேட்டை—சேலம்

(?) இப்போதெல்லாம் ரயிலிலே வெளியூர் பயணம் செய்வதாக இருந்தால் உயிரை இன்ஷ்யூர் செய்து கொண்டு விட்டால் என்ன?

ஆயுள் இன்ஷ்யூரன்ஸை சர்க்காரே ஏற்றுக் கொண்டிருக்கிறார்களல்லவா; அதனாலாவது ரயில் விபத்துகள் ஏற்படாது தக்க பாதுகாப்பு கிடைக்கக் கூடும்.

மலர் வண்ணன்; கொள்ளிடம்

(?) மவுண்ட் ரோடிலுள்ள சென்னை சட்டசபைக் கூட்டத்தை குழந்தைகள் படக் காட்சி சாலைக்காகத் திறந்து வைக்கிறாராமே பிரதமர் நேரு; ஏன்?

குழந்தைகளாவது 'தூங்காமல்' திரைப்படங்களைப் பார்ப்பார்களே என்பதால் தானோ, என்னவோ!

பொங்கல் மலர்

மலர் தனிப் பிரதி தேவைப்படுவோர் பதிவுத் தபால் கட்டணம் உட்பட ரூ. 2-75 அனுப்பி பதிவுசெய்து கொள்ள வேண்டுகிறோம். பதிவுத் தபால் வாயிலாக அனுப்பினால்தான் மலர் தடங்கலின்றி கிடைக்கும் என்பதற்கும் உறுதி தர இயலும்.

—நிர்வாகி

முகவரி மாற்றம்

டி. பி. அழகுமுத்து
துறையூர்
திருச்சி மாவட்டம்

★
விலை 2 ரூபாய்
★

- எண்ணங்களை எழுதியனுப்பச் சொன்னோம்—எண்ணிலடங்கா கருத்துக்களை குவித்து விட்டார்கள். 'விலை என்ன அமைக்கலாம் எனக் கேட்டிருந்தோம்—விலையைப்பற்றிக் கவலையில்லை' எனப் பலர் எழுதியிருக்கிறார்கள்.
- 'ஐந்தாயினும் பத்தாயினும் அஞ்சேன்' என்கிறார் மற்றொருவர்.
- ஒரு ரூபாய், அரை ரூபாய் விலையை விரும்புவோரும் சிலருண்டு—அவர்கள் எல்லாம் முரசொலி, 200 பக்கங்களில் பல வண்ண ஓவியங்களுடன் வெளிவரப் போகிறது என்பதை ஒருவேளை அறியாத நண்பர்களாயிருக்கலாம்.

★ **பொதுவாக 2 ரூபாய் விலையில், 200 பக்கங்களில், அழகான முகப்புடன், வண்ணச் சித்திரங்களுடன், அறிஞர் தம் கருத்துரைகளுடன் பொங்கல் மலர் வெளி வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.**

பொறுப்பாளர்,
பொங்கல் மலர்
"முரசொலி"
சென்னை—6

ஆசிரியரும், அச்சிடுபவரும், வெளியிடுபவரும், மு. கருணாநிதி, 'முரசொலி' அச்சகம், 4—128, மவுண்ட்ரோடு, தமிழ்நாடு, சென்னை—6